# PHOTONTECH




175, Main Street
Trincomalee
075 6602486



அறைவு 02 இயம் 42 June 14 - 20, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்


## உருவாகியது கிழக்கின் வீடமைப்பு அதிகார சபை

கிழக்கு மாகாணத்திற்கான வீடமைப்பு அதிகார சபை உத்தியோகபூர்வமாக உருவாக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் வீடமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் இச்சபை உருவாக்கப்பட்டுள்ளது. மாகாணசபை அதிகாரத்திற்குள் உருவாக்கப்பட்ட முதலாவது வீடமைப்பு அதிகாரசபை...... 13

# முதலமைச்சர் பதவியில் மாற்றமில்லை!!!

## முதலமைச்சர் பதவியை விட்டுக் கொடுத்து முஸ்லிம் காங்கிரஸ் பேரம்

### கல்முனையில் கரையோர மாவட்டம்



### மத்திய அரசில் மேலும் இரு பிரதி அமைச்சுக்கள்

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியில் எவ்வித மாற்றங்களும் நிகழாது என கிழக்கு மாகாண சபை தரப்பிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளது..

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் முஸ்லிம் காங்கிரசிற்கும் இடையேயான ஒப்பந்தப்படி முதலமைச்சர் பதவியைக் கையேற்றாக வேண்டிய காலம் முஸ்லிம் காங்கிரஸிற்குக் கனிந்துள்ளது. எனினும் அவ்வாறு கையேற்கும் நிலையிலுள்ள சாதக மற்றும் பாதக விடயங்களை கருத்திற்கொண்டு அப்பதவியைக் கையேற்காது அதற்குப் பதிலாக பேரம் பேசும் முடிவை முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவ்வாறான பேரம் பேசலில் கல்முனையில் கரையோர மாவட்டம் ஒன்றைக் கோரவும், மத்திய அரசில் மேலும் இரண்டு பிரதி அமைச்சர் பதிவிகளைக் கோரவும் முன்மொழிவொன்றை மு.கா கொண்டிருப்பதாகத் தெரிகின்றது........

# மத்திய கிழக்கிலிருந்து மனநிலைப் பாதிப்புடன் திரும்பிய தமிழ்ப்பெண்



## வீட்டுக்கு வெளியே கட்டிப் போடப்பட்டிருந்தவரை சக இலங்கைப் பணிப்பெண்கள் மீட்டுள்ளனர் ?

### திருகோணமலை மாவட்டப் பெண்கள் வலையமைப்பு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்

திருகோணமலை மாவட்டத்தின் சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அல்லை இடதுகரை-03 லிங்கபுரம் கிராமத்தை சேர்ந்த செல்வி. செல்லக்குமார். துஷாந்தினி என்பவர் மத்திய கிழக்குக்குத் தொழில் நிமித்தம் சென்று தற்போது மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் இலங்கைத் தூதரகம் ஊடாக நாடு திரும்பியுள்ளார்.

இவரது குடும்பத்தில் மொத்தமாக 07 குழந்தைகள் உள்ளனர். மூத்த மகள் துஷாந்தினி (வயது 19) குடும்ப வறுமை காரணமாக 2013 இல் பாக்கியராசா நிசாந்தினி என்ற பெயரில் போலி முகவர் ஊடாக சவூதிக்கு சென்றுள்ளார். அன்றில் இருந்து இவரின் தொடர்பு அடுத்த ஆறு மாதங்கள் மட்டுமே நீடித்துள்ளது. இதற்கு பின்னர் இவரின் தொடர்பு இல்லாமல் இருந்த நிலையில், சவூதியில் துஷாந்தினியோடு பணிப்பெண்ணாக இருந்த ஏனைய இலங்கைப் பணிப்பெண்கள் மூலம் அண்மையில் துஷாந்தினியின் நிலை தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே துஷாந்தினி மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் இலங்கைத் தூதரகம் ஊடாக இலங்கைக்கு கொண்டுவரப்படவிருப்பதாக அவரது பெற்றோருக்குத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 10ம் திகதி இரவு அவர் வீட்டிற்கு கொண்டு வரப்பட்டார்........... 13

## கிழக்கின் ஊடகவியலாளரும் விரட்டப்பட்டனர்

புலி முத்திரை குத்தப்பட்டு புலனாய்வு ஊடகவியல் தொடர்பான பயிற்சிநெறியில் கலந்து கொண்ட கிழக்கின் ஊடகவியலாளர்கள் உட்படத் தமிழ் ஊடகவியலாளர்கள் பயிற்சிநெறியில் இருந்து புறச்சக்திகளால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

ட்ரான்ஸ்பரன்சி இன்டநெசனல் ஸ்ரீலங்கா என்னும் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட பயிற்சிநெறியே புறச் சக்திகளால் குழப்பப்பட்டுள்ளது. சிங்கள மொழிமூல செயலமர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழிமூல செயலமர்வு பொலன்னறுவை கிரிதலே "டியர் பார்க்" ஹோட்டலில் மே மாதம் 22 ஆரம்பிக்கப்பட்டதுடன், பயிற்சி இடைநடுவே ஹோட்டல் .......... 13

## காசுத் தெருவைக் காப்பெட் தெருவாக்க நகரசபை நடவடிக்கை

திருமலை நகரின் காசுத் தெரு மற்றும் இராஜவரோதயம் தெரு ஆகியவற்றைக் காப்பெட் வீதிகளாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை நகரசபை முன்னெடுத்துள்ளது.

அதன் முதற்கட்டமாக அவ்விரு தெருக்களையும் கம்பளி வீதிகளாக மாற்றுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன. அக் கேள்விகளின் படி கம்பளி வீதிகளாக மாற்றுவதற்கான மொத்தச் செலவாக ரூபா. ஆறு மில்லியன் எண்ணூற்று நாற்பத்தேழாயிரம் மதிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களில் நிறைவு பெறத்தக்கதாக இத்திட்டங்கள்....... 13


AFTER ADVANCED LEVEL....

Join Full time Courses

@

VEAL BUSINESS COLLEGE

No.159A, Sea View Road, Trincomalee - 026 222 76 22 / 0777 555 738

aat SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

## கிழக்கின் கதிரையை பேரம் பேசும் மு. காங்கிரஸ் சாணக்கியம்

கிழக்கு மாகாண சபையில் தமக்குரித்தாக உருவாகிவரும் முதலமைச்சர் கதிரையைப் பேரம் பேசும் சாணக்கிய முடிவை முஸ்லிம் காங்கிரஸ் (மு.கா) எடுத்துள்ளதை அறிய முடிகின்றது.

கிழக்கில் ஆட்சியமைக்கும் போது முதலமைச்சர் கதிரையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு விட்டுக் கொடுத்ததன் ஊடாக அன்றைய தினத்திலும் பெரும் வரப்பிரசாதங்களை மு.கா தனது பேரம் பேசும் ஆற்றலால் அரசிடம் இருந்து பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இரண்டரை ஆண்டுகளின் பின்னர் இக் கதிரையைச் சுழற்சி முறையில் மு.கா கைப்பற்ற எண்ணியிருந்தது. எனினும் தற்போதுள்ள களநிலவரங்களை வைத்து இக் கதிரையைக் கைப்பற்றுவதை விட மேலும் சில பேரம்பேசல்களை மேற்கொள்ளவது நல்லது என்ற முடிவிற்கு மு.கா தயாராகி விட்டதாகத் தெரிகின்றது.

மு.கா வின் அரசியல் தந்திரோபாயம் மிகத் தெளிவாகக் கிழக்குக் கட்டில் இருப்பதை கடந்த இரண்டரை வருடங்களில் அதன் நடவடிக்கைகளைப் பார்த்துத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

கிழக்கு மாகாணத் தேர்தல் முடிந்தவுடன் ஆட்சியமைப்பதில் யாரும் தனிப் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளாத போது கிழக்கின் ஆட்சியாளரைத் தீர்மானிப்பவர்கள் மு.கா வாக இருந்தனர். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடமிருந்தும், தமிழத் தேசியக் கூட்டமைப்பிடமிருந்தும் ஒரு சேர கிடைத்த ஆட்சியமைக்கும் அழைப்புக்களை சீர்தூக்கிப் பார்த்து முடிவினை மேற்கொள்ளும் வாய்ப்பை மு.கா பெற்றிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அன்றைய திகதியில் இணைந்திருந்தால் கிழக்கு மாகாண சபையும் தமிழரின் ஆட்சிக்குட்பட்ட ஒன்றாகவே இருக்கும் வாய்ப்புக்கள் இருப்பதை மு.கா அன்று கவனத்திற் கொண்டிருந்தது. வடக்கு மாகாண சபை தமிழரின் தனியாட்சிக்குள் செல்லும் என்பது கண்கூடாகத் தெரிந்த நிலையில் கிழக்கில் தமிழர் தரப்புடன் இணைவதை விட ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கொள்வதன் இலாபங்கள் அதிகமாக இருந்ததை மு.கா அன்றே கணக்கிட்டு விட்டது.

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்தாலும் தமிழத் தேசியக் கூட்டமைப்பே ஆகக் கூடிய ஆசனங்களைக் கொண்டிருக்கும் ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்தால் அவர்களை விடத் தாமே அதிகளவு ஆசனங்களைக் கொண்டிருப்பதால் பேரம் பேசும் ஆற்றலுடன் பெரும்பான்மைப் பலத்தையும் மு.கா கொண்டிருக்கும் என்பதை உணர்ந்துகொண்ட மு.காவின் தந்திரோபாயமான தீர்வு இன்று மீண்டும் அந்தக் கட்சிக்கு பேரம்பேசும் ஆற்றலை விதைத்துவிட்டுச் சென்றுள்ளது.

அஷ்ரப் அவர்களின் பின்னர் மு.கா வின் தலைமைத்துவத்தின் ஆளுமையில் குறைவுகள் ஏற்பட்ட போதும் அதன் பாதை மிகத் தெளிவாக இருக்கின்றது.

சர்வதேச விசாரணையென்ற பொறி இறுகி வரும் தற்பாதைய சூழலில் பிரதான பங்காளிக் கட்சியான மு.காவுடன் மோதலொன்றை எதிர்கொள்ள ஆளும் கட்சி முயலப் போவதில்லை. எனவே சூழலும் அக்கட்சிக்குச் சார்பாக வரும் இவ்வேளையில் ஆளும் கட்சி வெறுமனே இதனை அனுமதிக்கப் போவதில்லை என்பதையும் மு.கா கருத்திற் கொள்ளவும் வேண்டும்.

தானாடாவிட்டாலும் தனது தசைகளான பொதுபல சேனா, ராவண பலய போன்ற அமைப்புக்களை அரசு ஆட்டவே முயற்சிக்கும் !

## வித்தியா பிரபா 2014ல் திருமலை புனித மரியாள் கல்லூரி வெற்றி

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை - தொழில் நுட்ப ஆராய்ச்சி அமைச்சு ஆகியவை இணைந்து அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கிடையில் நடாத்திய ஆய்வுகூடப் போட்டி வித்யா பிரபா 2014 லில் உயிரியல் பிரிவில் திருகோணமலை புனித மரியாள் கல்லூரி தேசிய வெற்றியாளர் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

ஆய்வுகூட வடிவமைப்பு, தரம் மற்றும் அங்கீகாரம், செயன்முறைகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் போட்டித்தன்மை ஆய்வுகூட உபகரணங்கள், குளு மற்றும் அறிக்கையிடல் என்பன போட்டிக்கான நிபந்தனைகளாக அடங்கி இருந்தன என்பதுடன், வலய வெற்றியாளர் பட்டியலில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியும் இடம் பிடித்தமை குறிப்பிடத்தக்கது.

(ஜெய்)

## மதுபோதைச் சாரதியால் வயோதிபர் மரணம்

திருகோணமலை, புல்மோட்டை பிரதான வீதியில் இக்பால் நகர் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் வயோதிபரொருவர் உயிரிழந்துள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இரவு இடம்பெற்ற இவ்விபத்தில் எட்டு பிள்ளைகளின் தந்தையான அல்லா பிச்சை செய்யது (வயது-71) என்பவரே உயிரிழந்துள்ளார்.

பள்ளிவாசலுக்கு சென்று தொழுது விட்டு துவிச்சக்கர வண்டியில் வரும்போது, மோட்டார் சைக்கிளில் வந்த நபர் பின் புறமாக மோதியதில், குறித்த வயோதிபர் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும் அங்கு சிகிச்சைக்கு பயனளிக்காமல் அவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மோதுண்ட நிலையில் கைது செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் சாரதியான ஜே.ஜெகதீபன் (27) மது போதையில் இருந்ததாகவும் காவல்துறையினர் குறிப்பிட்டனர்.

## ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 117வது கல்லூரி தினம்

சி.சசிக்குமார்

திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 117வது கல்லூரி தினம் 01.06.2014 ஆகும். இதனை முன்னிட்டு பாடசாலை மாணவர்களால் சேகரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள், மற்றும் பாவனை பொருட்கள் திருகோணமலையில் உள்ள அன்னை திரேசா இல்லம், புனித சூசையப்பர் இல்லம். கிறேஸ் இல்லம் என்பனவற்றுக்கு கடந்த சனிக்கிழமை (07) காலை பகிர்ந்து வழங்கி வைக்கப்பட்டது.

இந்த இல்லங்களில் மாணவர்களால் சிரமதானமும் மேற்கொள்ளப்பட்டது.



## மறுநாள் சாட்சி முதல் நாள் மரணம்

சித்தாண்டி முருகன் கோவில் பூந்தோட்டம் பகுதியில் இருந்து கடந்த புதன்கிழமை காலை 6.00மணியளவில் சித்தாண்டி முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த சாமித்தம்பி விநாயகம் (வயது 56) என்பவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

சித்தாண்டி முருகன் கோவில் சம்பந்தப்பட்ட வழக்கொன்று தொடர்பில் ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்திற்கு சாட்சியாக இவர் மறுநாள் சமூகமளிக்கவிருந்தாரென உறவினர்கள் தெரிவித்தனர்.

## புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சைகள்

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாகாணத்தில் இம்முறை தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல மாணவர்களுக்கும் 03 மாதிரிப் பரீட்சைகள் நடாத்த திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன.

முதலாவது பரீட்சை கடந்த மே மாதம் 28 ஆம் திகதி கிழக்கு மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களிலும் நடைபெற்றது. இரண்டாவது பரீட்சை கடந்த 09 ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

இறுதிப்பரீட்சை இம்மாதம் 14 ஆம் திகதி இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

## ஆஸியும் ஐக்கிய ராச்சியமும் நாடுகடத்த முடிவு

எதிர்வரும் வாரங்களில் பிரித்தானியாவில் இருந்து இலங்கையர்கள் சிலர் நாடுகடத்தப்படலாம் என்று தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

பிரித்தானிய ஊடகம் ஒன்றின் தகவல் படி, இதற்கான ஏற்பாடுகளை தற்போது பிரித்தானிய குடிவரவுத்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது.

பிரித்தானியாவில் அகதி அந்தஸ்த்து கோரி சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களே இவ்வாறு நாடுகடத்தப்படவுள்ளனர்.

இதற்கிடையில், தற்கொலை சம்பவங்களை கருதி இலங்கை அகதிகள் நாடுகடத்தப்படுவதை இடைநிறுத்தப் போவதில்லை என்று, அவுஸ்திரேலியாவின் குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி அவுஸ்திரேலியாவில் இருந்தும் எதிர்வரும் வாரங்களில் இலங்கையர்கள் சிலர் நாடுகடத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நாடுகடத்தப்படவுள்ள இலங்கை அகதிகளுக்கான முன்னறிவித்தலை, அவுஸ்திரேலியாவின் குடிவரவுத் திணைக்களம் வழங்கி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

## உடலை உரசியவருக்கு விளக்கமறியல்

அம்பாறை நகரலிருந்து நாமல் ஓயாவுக்கு பஸ்ஸில் பயணித்துகொண்டிருந்த பெண்ணொருவர் மீது பாலியல் சேட்டை புரிந்ததாக கூறப்படும் 22 வயது இளைஞரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அம்பாறை நீதிமன்ற நீதவான் ஹேமந்த பெரேரா புதன்கிழமை(11) உத்தரவிட்டார்.

சம்மாந்துறை, மாவடிப்பள்ளி பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயது இளைஞருக்கே இவ்வாறு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இளைஞர், பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவரை உரசியவாறு பயணித்துள்ளார். இவரது சேஷ்டையை தாங்க முடியாத அப் பெண் இங்கினியாகலை பிரதேசத்தில் வைத்து கூச்சலிட்டுள்ளார். இதனையடுத்தே குறித்த இளைஞனை பிடித்த பயணிகள் அவரை நையப் புடைத்து காவல் துறையிடம் ஒப்படைத்துள்ளனர்.

## காவல்துறையின் இலவச ஆயுள்வேத மசாஜ்



திருகோணமலையில் காவல் திணைக்களம் சிவில் பாதுகாப்பு குழு ஆகியன இணைந்து நடாத்திய இலவச ஆயுர்வேத வைத்திய முகாம் எத்தாபெந்திவெவ பகுதியில் நடாத்தப்பட்டது.

பொது மக்களினதும் காவல்துறையினதும் தொடர்பினை வலுப்படுத்தும் நோக்கில் கோமரங்கடவெல-மொறவெவ பிரதேசத்துக்கு பொறுப்பான உதவிக் காவல் அத்தியட்சகர் அமல் எதிரிமான்னவின் வேண்டுகோளின் படி மொறவெவ காவல்நலையப் பொறுப்பதிகாரி தம்மிக விஜயசிங்க தலைமையில் இடம் பெற்றது.

இந்த நடமாடும் ஆயுர் வேத சேவையில் நோயாளர்களை பரிசோதித்து இலவச மசாஜ் சேவையும் வழங்கப்பட்டது. முதலாவது இலவச சேவையினை பிரதேச செயலாளர் பிரேமதாச ஆரம்பித்து வைத்தார்.

இச்சேவையில் மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு துவிச்சக்கர வண்டிக்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு காப்புறுதி சேவை மற்றும் [illegible] வைத்திய சேவைகளும் இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவின் நாட்குறிப்பு

10.06.2014

## விசாரணையாளர்களை நியமித்துள்ளேன் இலங்கை ஒத்துழைக்க வேண்டும்



இலங்கையில் பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான பரந்துபட்ட விசாரணையை மேற்கொள்வதற்கான நிபுணர்கள் மற்றும் விசேட அறிக்கையாளர்கள் உள்ளடங்கிய விசாரணைக் குழுவை நியமித்துள்ளேன். இவ்வுண்மையைக் கண்டறியும் விசாரணை செயற்பாட்டுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை கோரிக்கை விடுத்தார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் தமது பணியில் இருந்து இளைப்பாறவுள்ள அவர் மனித உரிமை ஆணையாளராக ஆற்றிய இறுதி உரையில் விசாரணை செயற்பாட்டை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையினால் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களே நடத்துவார்கள் என்றும் நிபுணர்கள் மற்றும் விசேட அறிக்கையாளர்கள் அவர்களுக்கு உதவுவார்கள் என்றும் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையில் கடந்த மாதம் யுத்தம் முடிவடைந்து ஐந்தாவது நிறைவு விழா கொண்டாடப்பட்டது. ஆனால் பயங்கரவாதம் மற்றும் மோதல்களினால் ஏற்பட்ட தழும்புகள் இன்னும் ஆற்றுப்படுத்தப்படவேண்டியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். ஜெனிவா வில் அமைந்துள்ள ஐக்கியநாடுகள் சபை மனித உரிமைப் பேரவையில் நேற்று ஆரம்பமான 26 ஆவது கூட்டத் தொடரின் முதல் நாள் அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

10.06.2014

## இலங்கை ஒத்துழைக்க வேண்டும் "அமெரிக்கா, பிரிட்டன்"

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவுடன் இலங்கை ஒத்துழைக்கவேண்டும் என்றும் விசாரணையாளர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் அமெரிக்காவும் பிரிட்டனும் கோரிக்கை விடுத்துள்ளன.

ஐக்கிய நாடுகளின் விசாரணை செயற்பாட்டுடன் ஒத்துழைப்பவர்கள் எந்தவிதமான அச்சுறுத்தல்களும் பயமுறுத்தல்களும் இன்றி செயற்படுவதற்கான சூழலை உருவாக்கவேண்டும் என்றும் இந்த இரண்டு நாடுகளும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 26 ஆவது கூட்டத் தொடரின் முதல் நாள் அமர்வில் கோரிக்கை விடுத்துள்ளன.

12.06.2014

## ஒத்துழைக்காவிட்டால் கடும் அரசியல் பொருளாதார நெருக்கடி த.தே.கூ. சுமந்திரன் நா.உ.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நாயகம் நவிப்பிள்ளை தனது இறுதி அறிக்கையை செவ்வாய்க்கிழமை சமர்ப்பித்தார். இதன்போது இலங்கையில் போர்க் காலத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு சர்வதேச விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் த.தே.கூ வின் நா.உ சுமந்திரன் தெரிவித்துள்ளார். "சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்ற விடயத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு சென்று அதனை எதிர்க்கச் செய்து நாட்டின் பெரும்பான்மை இன மக்களுக்கு இவ் விடயத்தில் விருப்பமில்லை என்பதை வெளிப்படுத்தவே அரசாங்கம் முயற்சிக்கின்றது.

சர்வதேச விசாரணைக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்காவிட்டால் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக கடும் நெருக்கடிகளை சந்திக்க நேரிடும். இதனால் நாட்டு மக்களே கஷ்டங்களை அனுபவிப்பார்கள் என்று எச்சரிக்கையை சுமந்திரன் விடுத்தார். யுத்தம் தொடர்பில் மறைப்பதற்கு ஏதும் இல்லையென்றால் அரசாங்கம் ஏன் சர்வதேச விசாரணைக்கு பயப்படுகின்றது என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

12.06.2014

## பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரும் - தயான் ஜெயதிலக்க

சர்வதேச விசாரணைக்குழு நாட்டிற்குள் வருகை தருவதற்கு அனுமதியளிக்க முடியாது என அறிவித்துள்ள அரசாங்கம் விசாரணைக்கான ஒத்துழைப்புக்களை வழங்க முடியாது என பகிரங்கமாக தெரிவித்துள்ளது. அத்துடன் இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராகவும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு எதிராகவும் அரசின் பங்காளிகள் கடுமையான விமர்சனத்தை தெரிவிப்பதோடு ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்தியாவையும் சர்வதேச விசாரணையையும் ஏகநேரத்தில் எதிர்ப்பதால் அரசாங்கதிற்கு பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப்பிரதிநிதி கலாநிதி. தயான் ஜெயதிலக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

11.06.2014

## பொருளாதாரத் தடை- பறவாயில்லை

இலங்கை விடயத்தில் தலையிடும் அதிகாரம் நவநீதம்பிள்ளைக்கு இல்லை. அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து பெருமையடைகின்றோம் எனக் குறிப்பிடும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதித்தாலும் கவலையடையப் போவதில்லை எனவும் தெரிவித்தது.

இலங்கை விடயத்தில் முடிவெடுக்கும் அதிகாரமோ எமது நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கும் உரிமையோ சர்வதேசத்திற்கு இல்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு இலங்கையில் எந்த செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான அதிகாரம் இல்லை. சர்வதேச விசாரணைக்குழுவினை அவர் நியமித்தாலும் அரசாங்கத்தின் அனுமதியின்றி அவர் உள் நுழைய முடியாது. இந்த விடயத்தில் அரசாங்கம் மிகவும் உறுதியாக உள்ளமை எமக்கு பெருமையாக உள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் நாட்டின் மீது அரச தரப்பு கொண்டுள்ள அக்கறையையும் நாம் எப்போதும் வரவேற்போம் என்று தெரிவித்துள்ளார்.

## "எமது நாடு எமக்கில்லாமல் போகும்"

12.06.2014

உதய கம்மன்பில - ஜாதிக ஹெல உறுமய

இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணை கொண்டு வரப்பட்டதையடுத்து இவ்வியடம் தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில இலங்கை மிகப் பெரியதொரு அபாயத்தினை சந்தித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம் பெற்றதாக கூறப்படும் இராணுவ குற்றங்களை விசாரிக்க தற்போது இக் குழுவினர் வரவில்லை. வடக்கில் உள்ள பிரிவினைவாதக் கட்சிகளின் வேண்டுகோளுக்கு இணங்க தனித் தமிழ் ஈழத்தினை உருவாக்கவே இவ் ஐ.நா. விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. எனவே உடனடியாக மக்கள் தீர்வொன்றினை நோக்கி செல்ல வேண்டும். இப்போதே எமது பதிலடியினை பலமாக கொடுக்காவிடின் எமது நாடு எமக்கே இல்லாது போய் விடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 'விசாரணைக்குப் பதிலளிக்க நான் தயார்' - சரத் பொன்சேகா

சர்வதேச விசாரணையாளர்களுக்கு பதிலளிக்கத் தான் தயாராக இருப்பதாக இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். சர்வதேச விசாரணையையிட்டு அஞ்சுவதற்கு எதுவுமில்லை எனத் தெரிவித்துள்ள அவர் அவ்வாறு விசாரணைக்காக வருபவர்கள் நாட்டுக்குள் வந்ததும் தன்னையே முதலாவதாகச் சந்திக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

13.06.2014

## விசாரணை அணியின் தலைவியாக சாண்ட்ரா பிடஸ் நியமனம் பிரதான குழுவில் 12 அங்கத்தவர்கள் துணைக்குழுவினரும் நியமிக்கப்படவுள்ளது

# ஜெனீவா பக்கம்

10.06.2014

## ஒத்துழைக்க மாட்டோம் - ரவிநாத ஆரியசிங்க

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவினரின் விரிவான விசாரணைகளுக்கு தாம் ஒத்துழைப்பு வழங்க போவதில்லையென இலங்கை அறிவித்துள்ளது.

இலங்கையில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென, இன்று ஜெனிவாவில் ஆரம்பமான மனித உரிமைகள் பேரவையின் 26 ஆவது அமர்வின் போது, மனித உரிமை ஆணையாளர் நவி பிள்ளை, ஆற்றிய உரையினை அடுத்து இலங்கை பிரதிநிதிகள் குழுவின் தலைவர் ரவிநாத ஆரியசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

11.06.2014

## எதிர்ப்புப் பிரேரணை பாராளுமன்றில்

இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளை நியமிக்கும் விசாரணைக் குழு இலங்கைக்கு வருகைதந்து விசாரணை மேற்கொள்ளக் கூடாதென பிரேரணையொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தும் 9 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் இந்த பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரேரணை பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவிடம், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வரினால் சமர்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான அச்சல ஜாகொட, மாலினி பொன்சேக்கா, ஜானக்க பிரியந்த பண்டார, உதித்த லொக்குபண்டார, ஏ.எச்.எம் அஸ்வர், சாந்த பண்டார, ஜே.ஆர்.பீ சூரியப்பெரும, நிமல் விஜேசிங்க மற்றும் துமிந்த சில்வா ஆகியோர் இந்த பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர்.

12.06.2014

## பிரேரணை மீதான விவாதம் 17ல்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளையினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவினை அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து எதிர்வரும் 17ம் திகதி இலங்கை பாராளுமன்றில் விவாதம் நடத்தப்பட உள்ளது. விசாரணைக்குழுவிற்கு அனுமதியளிக்கக் கூடாது என ஆளும் கட்சி பாராளுமன்றில் யோசனைத் திட்டமொன்றை முன்வைக்க உள்ளது. இது தொடர்பிலான விவாதம் 17ம் திகதி நடத்தப்பட்டு, வாக்கெடுப்புக்கு விடப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றில் யோசனை சமர்ப்பிப்பது குறித்து நாளைய தினம் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையில் விசேட கூட்டமொன்று நடத்தப்பட உள்ளது. இதேவேளை, ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழுவினர் நாட்டுக்குள் பிரவேசித்து விசாரணை நடாத்த அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து 17ம் திகதி காலை நடைபெறவுள்ள கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது,

12.06.2014

## "தமிழ் மக்கள் சார்பாகக் கேட்கிறேன் ஒத்துழையுங்கள்" - இரா. சம்பந்தன்

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு மேற்கொள்ளவுள்ள விசாரணைகள் மூலம்- உண்மைகளைக் கண்டறிவதற்கு இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகவும்- தமிழ் மக்களின் சார்பாகவும் தான் இந்த கோரிக்கையை அரசிடம் முன்வைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த சம்பந்தன்- கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக ஐ.நா. விசாரணையை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அன்றிலிருந்தே மேற்படி விசாரணைக்கு ஒத்துழைக்கமாட்டோம் என்று இலங்கை அரசு பகிரங்கமாகத் கூறிவருவதாகவும் கூறினார்.போர் நிறைவுக்கு வந்து ஐந்து வருடங்கள் கடந்துள்ள நிலையில்- நம்பகரமான சுதந்திரமான ஒரு சுயாதீன விசாரணையை உள்நாட்டில் நடத்தியிருந்தால் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மோடியுடன் கொழும்பில் மோதுதல்"

**மூலம் : 'திசாரனி குணசேகர'**

**– கொழும்பு டெலிகிராப் –**

'எதைக் கொடுக்க வேண்டும், எதைக் கொடுக்கக் கூடாது என எனக்குத் தெரியும்.' மஹிந்த இராஜபக்ஷ (த ஹிண்டு - 05.07.2009)

த ஹிந்து இதழுக்கு வழங்கிய செவ்வியில் சனாதிபதி இராஜபக்சவை நோக்கி வீசப்பட்ட கேள்வியொன்றுக்கு 'திருத்தப்பட்ட 13+ வழங்கப்படும்' என உறுதியளித்திருந்தார்.

'தேவையெனில் நாளைக்கே அதனை வழங்க முடியும்' என அவர் உடனடியாகவே அழுத்திக் கூறியிருந்தார். அந்த நாள் ஜூலை மாதம் 2009ம் ஆண்டு.

அடுத்து வந்த ஐந்து ஆண்டுகளிலும் 13+ வை பல தடவை உறுதியளித்தும் அவ்வாறு தான் உறுதியளிக்கவில்லை எனவும் மீண்டும் மீண்டும் பல தடவைகள் கூறிவந்துள்ளார்.

**நரேந்திர மோடியின் வெற்றியின் பின்**

இராஜபக்ஷகளும் அவரது ஏவலர்களும் (பொது பல சேனா உட்பட) சற்றுச் செருக்குடையவர்களாக இருந்தனர். கொழும்பிலுள்ள தமது சித்தாந்தச் சகோதரர்களை இந்துத்துவ மீயுயர் அதிகாரத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள மோடி கைவிட மாட்டார் என நம்பியதே இச்சிறிய செருக்குக்குக் காரணமாய் போனது.அத்துடன் தமிழ்நாட்டின் தலையீடு இன்றி மோடியால் ஆட்சி அமைக்க கூடியதாய் இருந்தமை மற்றுமோர் காரணமாகும். முத்தாய்ப்பாய் மோடியின் பதவியேற்பு விழாவிற்கு வருகைதருமாறு விடுத்த அழைப்பு மேற்போந்த செருக்கைச் சரியானது என மேலும் உறுதி செய்தது.

'நாங்கள் எதையும் ஏற்கும் இலகு நிலையில் உள்ளோம்' எந்தவிடயம் தொடர்பாகவும் மோடி உறுதியானதும், சுயமானதுமான தீர்மானங்களை எடுக்கக் கூடியவாராகவே உள்ளார்.' என ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

உண்மையோ இவையெல்லாவற்றிற்கும் நேர்மாறாக உள்ளது. சந்தேகத்திற்கு இடமின்றி 13வது திருத்தத்தை அமுலாக்கவும் அதற்கும் மேலான விடயங்களை நோக்கியும் நகரப் போவதாகவும் மோடி தெரிவித்திருப்பதாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

*13*

ஒரே இரவில் அனைத்தையும் செய்துவிட முடியாது என ராஜபக்ஷ, மோடியுடனான சந்திப்பின் போது தெரிவித்ததாக கூறப்பட்ட போதும் அச் சந்தர்ப்பத்தில் 'பிரிவினைவாத யுத்தம் நிறைவுற்று ஐந்து வருடங்கள் போய்விட்டன.' என மோடி தெரிவித்ததுடன் சம்பாசனையின் ஒரு கட்டத்தில் இந்திய வெளிவிவகார செயலரிடம் 'மன்மோகன் சிங்கிற்கு ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதிகள் என்ன' என்றும் வினவியுள்ளார். அதற்குப் பதிலளித்த இந்திய வெளிவிவகார செயலாளர் '13வது திருத்தத்தை முழுமையாக அமுலாக்குவதுடன் அதற்கு மேலும் செல்லத் தயாராக இருப்பதாகவே உறுதியளிக்கப்பட்டது' என அவர் தெரிவித்திருக்கின்றார்.

*13*

கண்ணியம் மிக்கவரும், பண்புடையவருமான மன்மோகன் சிங் இவ்வாக்குறுதியை நிறைவேற்றும்படி கடுமையாக எப்போதுமே நினைவூட்டவில்லை. ஆனால் குஜராத்தியரான நரேந்திர மோடி ராஜபக்ஷவின் பொய் வாக்குறுதிகளை நம்பி ஏமாறும் வகையினர் அல்ல. வெறுமனே 25,332 சதுர மைல்களுக்குள் ராஜபக்ஷவின் அதிகாரம் நிலைகொண்டது போலல்லாமல் மோடி ஓர் பிராந்தியத் தலைவராக இருக்கின்றார்.

பாகிஸ்தான் மற்றும் இலங்கைத் தலைவர்களை முரணிசைவுடன் கையாளும் மோடியின் பண்பு புதிய படிப்பினையாக உள்ளது. தன்னுடைய சினம் தாங்கும் எல்லைகள் எவை என்பது தொடர்பான பிரக்ஞையும் தாண்டி மோடி பாகிஸ்தானிய நவாஸ்செரீப் உடன் நட்பு பாராட்டியுள்ளார். அதற்காதாரமாக வெளிப்படையாக செரீப்பை வாழ்த்தியுள்ளதுடன் அவரது தாயாருக்கு துப்பட்டா ஒன்றையும் பரிசளித்தமையைக் கூறலாம்.

இவை இந்திய, பாகிஸ்தானிய முரண்பாட்டைத் தீர்க்கவோ அல்லது காஸ்மீரில் அமைதியைக் கொண்டுவரவோ போவதில்லை. ஆனால் அவை சுய மரியாதையுடன், குழப்பமானதோ அன்றேல் அமைதியானதோ, பேச்சுக்களை இருதரப்பும் ஆரம்பிக்கப் போதுமான தொடர்பை வெளிக்காட்டியுள்ளன.

இவ் இரண்டு நாடுகளிற்கும் இடையேயான அதிகார வலுச் சமனிலையில் பெரும் இடைவெளி காணப்பட்டாலும் அதனை இரு நாடுகளும் கருத்திற் கொள்ளவேயில்லை.

மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையான வரவேற்பை அங்கு பெறவில்லை. அவர் கோரிக்கைகளுடனும், நினைவூட்டல்களுடனுமே உபசரிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தானைப் போல இலங்கையால் இந்தியாவின் அருகில் யதார்த்தமாக நிற்க முடியவில்லை. இலங்கையால் மிக இழிவாக ஒன்றைத்தான் செய்யமுடிந்தது. சில தமிழ் நாட்டு மீனவர்களைக் கைது செய்வது.



ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது ஆசியப் பலப்பரீட்சைச் சதுரங்கத்தில் தன்னையும் ஓர் போர்வீரனாக இலங்கை இணைத்துக் கொண்டுள்ளது. இதனால் ராஜபக்ஷ ஒன்றில் சீனாவில் தங்கியிருப்பதை விட்டு வெளிவருவது அல்லது அதிகாரங்களைப் பகிர்வது ஆகிய இரண்டிலொரு நிலையை

கடந்தவாரம் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் 13+ வை மறுத்திருப்பதற்குக் காரணம், இந்தியாவைப் பொறிக்குள் வீழ்த்த சீனா தம்மைப் பயன்படுத்தும் என சனாதிபதி யோசித்திருக்கலாம். அதனால் 13+ வை அமைச்சர் மறுத்திருப்பதன் ஊடாக பந்தை இந்தியக் கோட்டிற்குள் அரசு நகர்த்தியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ இலங்கைச் சுதந்திரக் கட்சியின் தலைவராகி 'மஹிந்த சிந்தனை' என்னும் இலக்கை வெளியிடும் வரை தெற்கில் சிங்களவரிடையே பரந்துபட்ட அதிகாரப் பகிர்விற்கு பெரும் எதிர்ப்பு இருக்கவில்லை.

ஆனால் மஹிந்த சிந்தனை மூலம் ஒற்றையாட்சியை அவர் முன்வைத்ததுடன் தாய்நாட்டுக் கோரிக்கைகளையும் புறந்தள்ளினார். 2006இல் ஜே.வி.பி யின் உதவியுடன் வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு எதிராக வழக்கொன்றைத் தாபித்ததுடன் அவை தனியாகப் பிரிந்தன.

மாகாணசபை முறைகளை எதிர்த்து மீண்டும் மாவட்ட சபைகளை உருவாக்கவும் அச்சபைகளில் யாரையும் நியமிக்கவும், நீக்கவும் சனாதிபதி விருப்பம் கொண்டுள்ளாரே தவிர, அதிகாரங்களைப் பகிர்வதற்கு அல்ல. அத்துடன் சீனப் பணத்தை அவர்கள் எதிர்பார்ப்பதால் இன்றோ நாளையோ மோடியுடன் மோதவே போகின்றார்கள்.

**.. தமிழில் – மாயன் ..**

# பட்டினியால் வாடியோருக்கு உதவிக்கரம் நீட்டிய புனித மரியாள் கல்லூரி

மூதூர் கிளிவெட்டி மேன்காமம் பிரதேசத்தில் பட்டினியால் வாடுகின்ற வறுமை நிலையில் இருக்கின்ற குடும்பத்திற்கு மனிதாபிமான உதவிகளை நல்குமாறு 17.05.2014 அன்றைய மலைமுரசு பத்திரிகையில் இடம்பெற்ற செய்தியைத் தொடர்ந்து, அக்குடும்பத்தின் தலைவரான வயோதிபருக்கு புனித மரியாள் கல்லூரியினால் உதவிக்கரம் நீட்டப்பட்டது. 24.05.2014 சனிக்கிழமை அன்று அருட்சகோதரிகளும் ஆசிரியர்களும் அவ்வயோதிபரைச் சென்று பார்வையிட்டதுடன், அவருக்கு கட்டில், மெத்தை, தலையணை போன்ற பல பொருள் உதவியையும், பண உதவியையும் செய்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விடயம் தொடர்பாக பாடசாலை அதிபரைச் சந்தித்தபோது இவ்விடயத்தில் மிகவும் அக்கறை எடுத்து ஆர்வத்துடன் பணியாற்றி அங்கு சென்று உதவி புரிந்த அருட்சகோதரி சாந்தினி அவர்களை சுட்டிக்காட்டினார். அவரைச் சந்தித்து இவ்வுதவிபற்றி கலந்துரையாடிய வேளை:

கே: இந்த விடயம் உங்களுக்கு இந்த உதவியைச் செய்வதற்கு தூண்டியது?

ப: (எவ்வித தயக்கமுமின்றி) மலைமுரசு தான். இப்பத்திரிகையில் 17.05.2014 அன்று வெளிவந்த இச்செய்தியைப் பார்வையிட்டவுடன், நாமும் இவருக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று உந்துதலாக இருந்தது. ஆதனால் உதவி செய்தோம்.

கே: யார் யாரிடம் உதவிகளைப் பெற்றீர்கள்?

ப: பாடசாலை மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும் பெற்றுக் கொண்டோம்.

கே: பாடசாலை மாணவர்களின் பங்களிப்பு எவ்வாறு அமைந்திருந்தது?

ப: (மிகவும் பூரிப்புடன்) முழுமையான பங்களிப்பு கிடைத்தது. காலைகூட்டத்தில் நாம் அறிவித்தவுடன், அன்று சிற்றுண்டிச்சாலைக்கென்று தாம் கொண்டுவந்திருந்த பணத்தை உடனடியாகச் சேகரித்து A/L மாணவர்கள் எமக்களித்தது மிகவும் மகிழ்சியாக இருந்தது. அதே போல் ஆசிரியர்களும் எமக்கு மனப்பூர்வமாக உதவினார்கள்.

கே: எவ்வாறான உதவிகள் உங்களுக்குக் கிடைத்தது? பணமாகக் கிடைத்ததா? அல்லது பொருளாகக் கிடைத்ததா? அல்லது இரண்டு ரீதியிலும் கிடைத்ததா?

ப: பணமாகவும் பொருளாகவும் இரண்டு வழிகளிலும் கிடைத்தது.

கே: அங்கு சென்று அவ்வயோதிபரைச் சந்தித்து இவ்வுதவியைச் செய்த போது உங்களின் மனநிலை எவ்வாறிருந்தது?

ப: மிகவும் கவலையாக இருந்தது. அவருக்கு இன்னும் செய்ய வேண்டும் என்ற மனநிலை எமக்கு ஏற்பட்டது. நாம் சென்றவுடன் அயலவர்கள் அனைவரும் அவ்விடத்திற்கு வருகை தந்து பற்றி கூறியது மிகவும் மனதை நெகிழச் செய்தது.

கே: அவருக்கு என்னென்ன வழிகளில் உதவினீர்கள்?

ப: பணம் மட்டுமன்றி, அவருக்கு கட்டில், மெத்தை, தலையணை, அரிசி, சீனி, சவர்க்காரம், உடை என்று கிட்டத்தட்ட ஒரு சில பொருட்கள் ஒருவருடத்திற்கு அவருக்குப் போதுமானதாகக் காணப்படும் வகையில் அவருக்கு வழங்கினோம்.

கே: இதுபற்றி மேலும் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

ப: அவருக்கு நாம் செய்த உதவிகள் காணாது என்பதுடன், இன்னும் பல உதவிகள் அவருக்குத் தேவை என்பதால், இன்னும் பல உதவிகள் செய்யவேண்டும் என்று நினைக்கின்றேன்.

கே: இவ்வளவு நேரமும் என்னுடன் கூட இருந்து மனம் சலிக்காது, இந்த தகவல்களை வழங்கியதற்கு மிகவும் நன்றி சிஸ்டர்.

ப: நன்றி.

**(கலந்துரையாடியவர் - மரியஜெயந்தா)**



உதவிக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவு சரியானதே!

**...நாட்டு நடப்பு...**

அரசாங்க உத்தியோகத்தர்களான அந்த இளம் தம்பதிகள் இருவரும் முகாமைத்துவ உதவியாளர்களாக வெவ்வேறு திணைக்களங்களில் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு பாடசாலைக்குச் செல்லும் வயதில் இரு பிள்ளைகள் இருப்பதால் வேலைப்பழு சற்று குறைவாக காணப்பட்டாலும் பணிப்பெண் ஒருவரின் சேவை அங்கு தேவைப்பட்டது.

அப்பகுதியில் வீடு வாடகைக்கு எடுப்பது என்பது சுலபமான காரியமல்ல. அப்படி வீடு கிடைத்தாலும் வாடகையும், முற்பணமும் அதிகமாக செலுத்த வேண்டும். அதனால் அக்குடும்பம் நீண்டகாலமாக அங்குள்ள அரசினர் விடுதியிலே (Quarters) வாழ்ந்து வருகின்றது.

அந்த விடுதி வன இலாகாவுக்கு சொந்தமானது.



பிறம்பான காணி ஒன்றில் அது அமைந்துள்ளதுடன் அக்குடும்பத்தினரின் தேவைக்கேற்ப சகல வசதிகளையும் அது கொண்டிருந்தது. கணவரும், மனைவியும் அலுவலகங்களுக்கு செல்லும் போது பிள்ளைகளும் பாடசாலைக்குச் சென்று' விடுவார்கள். சமையல் உள்ளிட்ட வீட்டு வேலைகளுக்கு மட்டும் ஒரு பணிப்பெண் தேவைப்பட்டாள்.

வெளிநாடு சென்றுள்ள பல பணிப்பெண்கள் பாலியல் வல்லுறவுகள் உள்ளிட்ட சொல்லொண்ணா பல சித்திரவதைகளுக்கு உள்ளாகுவதும், பலர் சடலமாக நாடு வந்து சேருவதும், எம்மைப் பொறுத்தவரையில் புத்தம் புதிய நிகழ்வுகளல்ல.

மூதூர் ரிஸானாவின் விடயத்தில் எமது நாட்டு ஜனாதிபதி உள்ளிட்ட பல சர்வதேச தலைவர்கள் தலையிட்டும் ரிஸானாவை காப்பாற்ற முடியவில்லை. எமது நாட்டிலிருந்து மத்தியதரை நாடுகளுக்குச் சென்றிருப்பவர்களில் தாய்மையடைபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து சென்று கொண்டே இருக்கின்றது. கடந்த 12 மாத காலப்பகுதிக்குள் சுமார் 300க்கு மேற்பட்ட பணிப்பெண்கள் கருவுற்ற நிலையில் நாடு திரும்பியதாக நம்பத்தகுந்த புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ஒப்பந்தத்தின்படி எந்தவொரு பணிப் பெண்ணுக்கும் உரிய வேதனங்கள் செலுத்தப்படாது ஏமாற்றுவதும், இழுத்தடிப்பதும் சாதாரண நிகழ்வுகளாக மாறி வருகின்றன. அடிமைகள் போன்று நடாத்துதல், இம்சைப்படுத்துதல், வழுக்கட்டாயமான வன்புணர்வுகள், விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல், உடல், உள ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துதல் போன்ற அநாகரீகமான சம்பவங்களை நேரில் அனுபவித்த பல பணிப்பெண்கள் ஊடக நேர்காணல் மூலம் மிக துணிச்சலாக வெளிப்படுத்தியுள்ளனர்.

அவ்விதமான அநேக சம்பவங்களை நாளாந்த அச்சு ஊடகங்கள் கட்டமிட்ட விசேட செய்திகளாக பிரசுரித்தாலும் நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்பவர்களின் எண்ணிக்கையில் இன்னமும் சரிவு நிலை ஏற்படவில்லை என்பதை மிக கவலையுடன் தெரிவிக்க வேண்டியுள்ளது. வெளிநாடு செல்லும் பணிப்பெண்கள் எதிர்கொள்ளும் ஆபத்துக்கள் உள்நாட்டு பணிப்பெண்களுக்கு இல்லை. மேலும் அவை அறவே இல்லை என்று கூறமுடியாது. தவிர்க்க முடியாத பல காரணங்களினால் ஆங்காங்கே இடம்பெறும் சில சம்பவங்களை அறியக்கூடியதாகவுள்ளன.

மேலும் வீட்டு பணிப்பெண்களுக்கு நேரிடுகின்ற நேரடி அனர்த்தங்கள் காரணமாக உள்நாட்டில் வீட்டு வேலைகளுக்கு பணிப்பெண்களை தேடிக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமானதே. இருப்பினும் அந்த தம்பதிகளுக்கு ஒரு பணிப்பெண் மிக அவசரமாக தேவைப்பட்டாள். வீட்டுத்தலைவர் அரசாங்க உத்தியோகத்தர் என்பதாலும் அப்பகுதி அரசியல் கட்சியொன்றின் மாவட்ட ஏற்பாட்டாளர் என்பதாலும் எப்படியோ ஒரு வீட்டுப் பணிப்பெண்ணை தனது வீட்டு வேலைக்கு இலகுவாக அமர்த்திக் கொண்டார்.

குறித்த அப்பணிப்பெண் ஒரு விதவை, முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிப் போரில் அவளது கணவன் அகால மரணம் அடைந்ததாலே அவள் துர் அதிர்ஷ்டவசமாக விதவைக் கோலத்திற்கு ஆளாக்கப்பட்டாள். தனது ஐந்து வயது பெண் குழந்தையை வவுனியா சிறுவர் காப்பகத்தில் ஒப்படைத்து விட்டே அந்த வீட்டில் பணிப்பெண்ணாகச் சென்றாள்.

அந்த குடும்பத் தலைவர் மிகவும் இரக்கசுபாவம் கொண்டவர். அவ்வாறே அவர் மனைவியும் கூட.

சில வீடுகளில் எதற்கெடுத்தாலும் வீட்டு உரிமையாளர்களால் வீட்டு வேலைக்காரர்கள் மீது எரிந்து விழுவது வழமை.

அந்த வீட்டில் அப் பணிப்பெண்ணுக்கு கஷ்டமான வேலைகள் என்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. வழமையான சமையல் வேலைகளும், வீட்டை சுத்தம் செய்யும் வேலைகளுமே அவளுக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தன. அரசாங்க உத்தியோகத்துடன் அந்த குடும்ப தலைவர் ஓர் அரசியல்வாதியாக செயல்படுவதால் மாதம் இருமறை கட்சியின் ஆலோசனை செயலமர்வுகள் அவரின் இல்லத்தில் இடம்பெறும். அன்றைத் தினங்களில் மாத்திரம் அவளுக்கு சற்று வீட்டு வேலை அதிகமாக காணப்படும்.

அச் சந்தர்ப்பத்தில் அப்பணிப்பெண்ணுக்கு வீட்டுத் தலைவரின் மனைவி உதவி வருவது வழமை. அன்று கட்சியின் விசேட கலந்துரையாடலுக்கான ஒழுங்குகளை மாவட்ட ஏற்பாட்டாளர் மேற்கொண்டிருந்தார். பலர் அன்றைய கலந்துரையாடலில் கலந்து கொள்வதால் மதிய உணவு, மது போன்ற உபசார வேலைகள் அங்கு அதிகரித்திருந்தன.

சமையலறையில் அவரது மனைவி ஒருபுறம் காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்தார். மறுபுறம் அப்பணிப்பெண் அங்கு தேவையான பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்தாள். அன்றைய சமையல் வேலைகள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதனை அறிந்து கொள்ள ஏற்பாட்டாளர் அங்கு சென்றிருந்தார்.

அங்கு காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்தவரை கண்ட அவர் தனது கரங்களால் கட்டிப்பிடித்து கன்னங்களில் முத்தம் கொடுத்ததுமல்லாமல் செல்லமாக இடுப்பையும் கிள்ளினார். அவர் அவ்விதம் புரிந்தது வேறுயாருக்குமல்ல அவரின் சொந்த மனைவிக்கே.

'உங்களுக்கு எத்தனை தரம் சொல்லி இருக்கிறன் வேலை செய்கிற நேரங்களில் இப்படியான சேட்டை பண்ணக் கூடாதென்று' என அவர் மனைவி அவர் மேல் எரிந்து விழுந்தார்.

'நல்லா உறைக்கிற மாதிரி சொல்லுங்க அம்மா, நான் கூட ஐயாவுக்கு பல முறை சொல்லியும் அவர் கேட்ட பாடில்லை' என்றாள் பணிப்பெண். ஏற்பாட்டாளரின் முகத்தில் அசடு வழிய அவர் அங்கிருந்து உடனே நழுவிச் சென்றார். ஆனால் பணிப்பெண்ணின் அப் பேச்சினால் மனைவி பதட்டம் அடைந்தாலும் அதை அங்கு காட்டிக்கொள்ளாது அன்றிலிருந்து கணவன் மீது சற்று கவனம் செலுத்த ஆரம்பித்தார் மனைவி.

அன்று கணவர் மது போதையில் இருந்தபடியால் அங்கு நின்றவர் பணிப்பெண் என நினைத்து மனைவியின் மேல் கைவைத்துவிட்டார். சுமார் ஐந்து நாட்கள் பெண் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான செயலமர்வு கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து விட்டு வீடு திரும்பிய ஏற்பாட்டாளரின் மனைவி அங்கு பணிப்பெண்ணை காணாது அவள் எங்கே என்று கணவனிடம் விசாரித்த பொழுது அவர் இவ்வாறு கூறினார்.

'நான் நேற்று அலுவலகத்திலிருந்து இரவு 11 மணிபோல் வீட்டுக்கு திரும்பி வந்த பொழுது அவள் பக்கத்து பாடசாலை காவலாளியுடன் அவளது படுக்கையறையில் ஒன்றாக இருந்ததைக் கண்டேன். என்னைக் கண்டதும் காவலாளி பின் கதவால் வெளியேறி மதிலால் பாய்ந்து ஓடிவிட்டான். அடுத்தநாள் காலை அவளுக்கு சம்பளக் காசை கொடுத்து போகச் சொல்லிப் போட்டேன்' என்றார் கணவர்.

அவரின் கூற்றை நம்பவும் முடியாமல் நாம்பாமல் இருக்கவும் முடியாது அவர் மனைவி தத்தளித்ததுடன் தனது புலனாய்வு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டார். பணிப்பெண் அங்கு இல்லாததால் சகல வேலைகளும் ஸ்தம்பிதமடையத் தொடங்கியது. மனைவி ஒரு தீர்க்கமான முடிவொன்றினை எடுத்திருந்தார். அந்த முடிவு பல நிகழ்கால பிரச்சினைகளுக்கும் எதிர்கால பிரச்சினைகளுக்கும் ஒரு சுமூகமான தீர்வை வழங்கியது.

அதாவது இனிமேல் வீட்டு வேலைகளுக்கு எந்தவொரு பணிப்பெண்ணையும் வைத்திராது தானே முழுப்பொறுப்பையும் ஏற்று நல்லதொரு குடும்ப



பெண்ணாக செயல்படுவதே அவரது தீர்க்கமான முடிவாக இருந்தது. அதற்கு முழுத்தடையாக இருந்த தனது உத்தியோகத்திலிருந்து அவர் விலகிக்கொண்டார். இன்று அவர் முழு நேர குடும்பப் பெண். தற்பொழுது குடும்பத்தில் சகல வேலைகளும் கிரமமாக இடம்பெறுவது மாத்திரமல்ல, அந்த பிள்ளைகள் இருவரும் பெற்றோரின் அன்பை நேரடியாகப் பெற அது வாய்ப்பாக இருந்தது. கணவரது இச்சைக்கு அந்த பணிப்பெண் இசைவடையாத காரணத்தினால் கணவர் பழிவாங்கும் நோக்குடன் அவளை திட்டமிட்டு துரத்திய உண்மையும் நாளடைவில் மனைவிக்கு தெரியவந்தது.

முற்றும்..

**- பாலையூற்றான் -**

---

## புகை பிடிக்கும் நபர்



சீனாவில் உள்ள கடைக்கு ஒருவர் தனது இரண்டு வயது குழந்தையுடன் உட்கார்ந்திருந்தார். தனது மகனை அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்காரவைத்துவிட்டு அவர் சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தார். திடீரென அவரை அவருடைய நண்பர் அழைக்கவே, சிகரெட்டை அங்கேயே வைத்துவிட்டு, நண்பரிடம் சற்று தூரத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தார்.

தந்தை சிகரெட் பிடிப்பதை பார்த்துக்கொண்டிருந்த அந்த இரண்டு வயது சிறுவன், தந்தை வைத்துவிட்டு போன சிகரெட்டை எடுத்து ஸ்டைலாக புகைபிடிக்க தொடங்கினான். இந்த காட்சியை பார்த்து அந்த வழியாக சென்றுகொண்டிருந்தவர்கள் ஆச்சரியம் அடைந்தனர்.

## 3300 வயது

சீனாவிலுள்ள மயானம் ஒன்றில் சுமார் 3300 வருடங்கள் தொன்மையான இரண்டு காற்சட்டைகள் கட்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான மனிதனால் உருவாக்கப்பட்ட மிகப் பழைமையான ஆடையாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. ரேடியோ கார்பன் முறையின் மூலம் இக்காற்சட்டைகளின் வயது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் குதிரை சவாரிக்காக மக்களுக்கு புதிய ரக ஆடைகள் தேவைப்பட்டுள்ளன. இதற்காக இக்காற்சட்டைகள் உருவாக்கப்பட்டு 40 வயதுடைய போர் வீரர்களால் அல்லது மேய்பாளர்களால் அணியப்பட்டிருக்கலாம் எனக் எதிர்வுகூறப்படுகின்றன.

தற்போதும் பாதுகாப்பாகவுள்ள இக்காற்சட்டைகள் நகரீக காற்சட்டை மாதிரி வடிவமைப்புகள் போன்று காணப்படுகின்றது. 1970ஆம் ஆண்டு முதல் தோண்டப்பட்டு வரும் சீனாவின் டரிம் பஸின் பிரதேசத்திலுள்ள யங்காய் கல்லறைப் பகுதிலே இக்காற்சட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமன சங்கமம்

சிறுகதை

நேற்று நடந்ததை நினைக்கும் போதெல்லாம் அபிராமியின் கண்கள் கலங்கிக் கொண்டே இருந்தன. கடைசியாகப் பார்க்க வந்த மாப்பிள்ளையும் ஏதோ சில காரணங்களுக்காக பதில் கூறாமல் சென்றுவிட்டனர். மாலையில் வீடு வந்து சேர்ந்ததும் அம்மாவின் மடியில் தலைசாய்த்துப் படுத்தாள். வேதனையால் வாடிய முகத்தைக் கண்ட அம்மா தன் மகளுக்கு ஆறுதல் சொல்லும் பாவனையில்,

"ஏம்மா அபி, ஆபிசுல இன்னிக்கு ஏதோ மீட்டிங் இருக்குன்னு சொன்னியே என்ன ஆச்சு?"

"இன்னிக்கு எங்க மேனேஜர் ஏதோ அவசர வேலையா வெளியூர் போறாரு, அதனால மீட்டிங் கேன்சல் ஆயிருச்சு."

"சரி நீ ரொம்ப நாளா சொல்லிட்டு இருந்த.. உன் பிரண்ட் மீனாட்சியோட குழந்தை எப்படி இருக்காமா? இந்த வாரம் வேலையில்லைனா சனிக்கிழமை போய் பார்த்துட்டு வாயேன்!"

"இல்லமா அடுத்த வாரம் எனக்கு எம்.பி.ஏ எக்ஸாம் இருக்கு, இப்ப வரைக்கும் எதுவும் படிக்கல. இந்த சனி, ஞாயிறு படிச்சாதான் முடியும் இல்லைனா ஃபெயில் தான். அப்புறம் எப்பவாவது டைம் கிடைக்கும் போது போய் பார்த்துட்டு வரேன்."

"சரிமா நீ ரொம்ப டையர்டா இருக்க நான் போய் காபி எடுத்திட்டு வரேன்" என்று கூறிவிட்டு சமையலறையை நோக்கிச் சென்றாள்.

அபிராமியின் அதே மனநிலைதான் பெரியசாமிக்கும் இருந்தது. அலுவலகத்தில் மதிய சாப்பாட்டை சாப்பிட முடியாமல் வெறும் மாத்திரையை மட்டுமே உட்கொண்டார். இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட மாப்பிள்ளை வீட்டார் பார்த்துவிட்டுச் சென்றதை நினைத்து, எப்படியாவது இந்த வருட இறுதிக்குள் ஒரு நல்ல வரன் அமைய வேண்டும் என்று ஆண்டவனை வேண்டிக்கொண்டிருந்தார். வெளியில் இருள் சூழ்ந்ததைப் பார்த்துவிட்டு தனது பழைய பஜாஜ் ஸ்கூட்டரில் வீட்டிற்குக் கிளம்பினார். இந்த பச்சை நிற ஸ்கூட்டர் அபி பிறந்த வருடம் வாங்கியது. இன்றுடன் இதற்கு 27 வருடங்கள் நிறைவடைந்ததை மனதில் எண்ணிக்கொண்டே வழக்கமாக செல்லும் சாலையில் சென்றார்.

வழியில் டீக்கடையில் நின்றிருந்த புரோக்கர் மாணிக்கத்தைப் பார்த்துவிட்டு வண்டியை நிறுத்தினார்.

"என்னப்பா நேத்து சாயந்திரம் ஃபோன் பண்றேனு



சொல்லிட்டு அப்பறம் ஆளையே காணோம்?"

"இல்ல சார் நேத்து வீட்டில கொஞ்ச வேலையிருந்துச்சு அதான் ஃபோன் பண்ண முடியல."

"என்னப்பா நீ கூட்டிட்டு வர ஒருத்தரும் சரியா அமையரதில்ல. நீ கேட்கும்போதெல்லாம் நான் பணம் தர்றேன். ஆனா நல்லதா ஒண்ணும் அமைய மாட்டேன்ங்குதே."

"சார் நான் என்ன செய்யறது, என் முன்னாடி ஜாதகம் நல்லா இருக்குனு சொல்லிட்டு நேரல வந்து பார்த்திட்டு புடிக்கலைன்னு சொல்றாங்க. இதுவரைக்கும் நான் 25 ஜாதகம் உங்களுக்கு கொடுத்திருக்கேன். சரி சார் நீங்க இனி கவலைய விடுங்க உங்க பொண்ணுக்கு நல்ல ஒரு மாப்பிள்ளைய நான் எங்கிருந்தாவது கண்டுபிடிச்சுக் கொண்டுவரேன்."

"என்னமோ மாணிக்கம் இதையே தான் நீ ஒவ்வொரு தடவையும் சொல்ற, எப்படியாவது நம்ம அபிராமிக்கு ஒரு நல்ல வரன் அமைஞ்சா நல்லா இருக்கும். சரி மாணிக்கம் டைம் ஆகுது நான் கிளம்பறேன்" என்று கூறிச் சென்றார்.

வீட்டிற்குச் சென்றதும் மனைவி சிவகாமி கொடுத்த சர்க்கரை இல்லா காபியைக் குடித்துவிட்டு சிறிது இளைப்பாறினார்.


"சிவகாமி, பொண்ணு வந்துட்டாளா?"

"ஹூம்ம் வந்துட்டாங்க டையர்டா இருக்குனு சொல்லிட்டு படுத்துட்டா."

"ஒண்ணுமே புரியமாட்டேங்குதுமா, இதுவரைக்கும் 25 பேர் பார்த்துட்டுப் போய்ட்டாங்க. ஆனா எதுவுமே சரியா அமையல."

"ஆமாங்க அத நெனச்சாத்தான் மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு. நம்ம பொண்ண நினைச்சாதான் ரொம்ப கஷ்டமா இருக்கு,

"வர்ற வழியில நம்ம புரோக்கர் மாணிக்கத்தைப் பார்த்துட்டு வரேன், அவன்கிட்ட இருந்தும் நல்ல பதில் இல்ல!"



"பாருங்க அவ கூட ஸ்கூல்ல படிச்ச மீனாட்சிக்கு கல்யாணமாகி இப்ப குழந்தையும் பொறந்தாச்சு. இப்படி அபிராமி வயசில இருக்கிற எல்லாருக்கும் கல்யாணமாகி குழந்தை பொறந்து சந்தோஷமா இருக்காங்க?"

இந்த சம்பாஷனைகளை உள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்த அபிராமிக்கு கண்களில் கண்ணீர் வழிந்தது. தனது விதியை நினைத்து வருந்தினாள். எந்த நல்ல காரியங்களுக்குச் சென்றாலும் "ஏம்மா இன்னும் உனக்கு கல்யாணம் ஆகலையா, கடைசியா வந்த மாப்பிள்ளையும் பிடிக்கலைனு சொல்லிட்டாங்களாமே. உனக்கும் வயசாகிட்டே போகுது சீக்கிரமா ஏதாவது அமைஞ்சா பரவயில்ல" என்று தங்களுக்கு தெரிந்த கீதா உபதேசங்களைச் சொல்வதைக் கேட்பது அபிராமிக்கு வழக்கமான ஒன்று.

அடுத்த நாள் காலை வழக்கம்போல் "ஏன்டி உனக்கு எவ்வளவு தடவ சொன்னாலும் தெரியாதா, அதான் சாதம் செஞ்சு வச்சிருக்கேன் கொஞ்சம் உக்கார்ந்து சாப்பிட்டுப் போனாதான் என்னா. எப்பப்பார்த்தாலும் இப்படி காலை சாப்பிடாம வெறும் வயத்துல போனா எப்டி வேலை செய்ய முடியும்."

"அம்மா நான் தான் ஏதாவது ஒரு ஃப்ரூட் சாப்பிடறேன்ல இததான் எல்லா டாக்டர்ஸும் டீவியில சொல்றாங்க. சோ ஒரு பிரச்சினையும் இல்ல. சரிமா எனக்கு டைம் ஆச்சு நான் கிளம்பறேன்."

முந்தா நாள் லீவு எடுத்ததால் அபிராமிக்கு வழக்கத்திற்கு மாறாக வேலைச் சுமை சற்று அதிகமாகவே இருந்தது. தனது ஹேன்ட்பேக்கை டிராவரில் வைத்துவிட்டு, கம்ப்யூட்டரை ஆன் செய்தாள். அருகிலிருந்த ஸ்வப்னாவைப் பார்த்துவிட்டு,

"ஹாய் மீ குட்மார்னிங், பாஸ் வந்தாச்சா?"

"இன்னும் இல்ல, நாளைக்குத்தான் வர்றதா ராகவன் சொன்னாரு"

"ஸ்வப்னா இப்பவெல்லாம் முன்னமாதிரி வேலை செய்ய இன்டிரஸ்டே இல்லடி."

"ஏன் அப்படி சொல்ற, இந்த வேலை புடிக்கலையா?"

"அப்படியெல்லாம் இல்ல, ஏனோ மனசே சரியில்லை. பீஸ்ஃபுல்லாவே இல்ல"

"சரி விடுடி, எனக்கும் இப்படித்தான் இருந்துச்சு. நாம என்ன பண்ண முடியும்? நல்ல வரன் அமைஞ்சா எல்லாம் சரியாயிடும்."

"போதும்டி இதுவரைக்கும் எவ்வளவோ பேர் வந்து பார்த்துட்டு போய்ட்டாங்க. வர்றவுங்க எல்லாம் வரதட்சணை அதிகமா கேட்கறாங்க, இல்லைனா ஜாதகம் சரியில்லைனு ஃபோன்ல சொல்றாங்க. இன்னும் சில பேர் ரீசனே இல்லாம வேண்டாம்னு சொல்றாங்க."

"வீட்டில அப்பாவும் அம்மாவும் ரொம்ப கவலையா இருக்காங்க. எப்பவும் இதே பேச்சுதான், வீட்டில சந்தோஷமே இல்ல. யோசிச்சு பார்த்ததில நான் கல்யாணமே பண்ணிக்க வேண்டாம்னு இருக்கேன். அப்பா அம்மாவை நல்லா பார்த்திட்டு, அப்புறம் ஏதாவது சோஷியல் சர்வீஸ் பண்ணிட்டு காலம் கழிச்சிடலாம்னு முடிவு பண்ணிட்டேன்."

"ஏய் இதெல்லாம் பிராக்டிகலா ஒத்துவராது. பேசறதுக்கு வேணும்னா நல்லா இருக்கும். காலம் நேரம் வரும்போது எல்லாம் சரியாயிடும். சரி ரொம்ப நேரமாச்சு, நம்ம லஞ்ச்ல டிஸ்கஸ் பண்ணலாம்."

அபிராமியின் மனதில் ஏதேதோ எண்ண அலைகள் பறந்தன. எப்போதும் கலகலப்பாக இருக்கும் அவளது முகத்தில் முந்தைய பளபளப்பு இல்லை. எப்போதும் முகத்தில் ஒருவித கவலையே படர்ந்திருந்தது. உள்ளச் சோர்வு அதிகமானதால் அவளுக்கு முன்போல் வேலையில் ஈர்ப்பு ஏற்படவில்லை.

லஞ்சில் . . .

"அபிராமி நீ சொன்னதெல்லாம் பிராக்டிகல் ஒத்துவராது. கொஞ்ச காலம் வெயிட் பண்ணு."

"எனக்கு இதுல நம்பிக்கை இல்ல, நான் டிசைட் பண்ணிட்டேன். ஈவினிங் அம்மாட்ட பேசலாம்னு இருக்கேன்."

"நான் என்ன பொம்மையா? ஒவ்வொருத்தரும் வந்து பார்த்திட்டு போக. இதெல்லாம் பிடிக்கல ஸ்வப்னா, ஏன்டா பொண்ணா பொறந்தேன்னு தோணுது."

"ஏய் நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே! நம்ம ஆபிஸ்ல வேலை செய்ற ராகுல் அவன் விருப்பத்த எத்தனையோ தடவை உன்கிட்ட சொல்லிட்டான். நீ தான் எந்த பதிலும் சொல்லாம இருக்க."

"ஸ்வப்னா ப்ளீஸ் ராகுல பத்தி பேச எனக்கு விருப்பமில்ல. வேற ஏதாவதுனா சொல்லு எனக்கு பிடிக்காத விஷயத்தை பத்திப் பேசாதே."

"ஏன் உனக்கு பிடிக்கல,."

"அதெல்லாம் ஒண்ணுமில்லடி, உனக்குத் தெரியாதா ராகுல் என்னவிட ஒன் இயர் ஜூனியர்னு."

"ஏய் இதெல்லாம் பிராப்ளமே இல்ல"

"இதெல்லாம் இப்ப பேசறதுக்கு நல்லா இருக்கும், நாளைக்கு கல்யாணமாகி ஏதாவது பிரச்சினைனு வந்தா இந்த டாபிக் தான் ஃபர்ஸ்ட் வரும். அப்போ நான் தான் ஃபேஸ் பண்ணனும்."

இந்த ஒரு பிராப்ளம்தான் இருக்குதுனா ராகுல்கிட்டயே நேரா போய் பேசு. உன் ஒப்பீனியன சொல்லு, ரெண்டு பேரும் பேசி ஒரு நல்ல முடிவு எடுங்க."

"நீ சொல்றதெல்லாம் சரிதான் ஆனா எங்க வீட்டில ஒத்துக்க மாட்டாங்க. என்னை ரொம்ப நம்பிட்டு இருக்காங்க."

"நான் இவ்வளவு சொல்லியும் நீ கேக்கல, இது உன் ஃலைப். நீ தான் முடிவு பண்ணனும். சரி லேட் ஆச்சு போலாம் வா" என்று கூறிவிட்டு இருக்கையை நோக்கிச் சென்றனர்.

அன்று மாலை ஸ்வப்னா, அபிராமியுடன் நடந்த உரையாடலைப் பற்றி ராகுலுக்குத் தெரிவித்தாள்.

மாலை அபிராமி வீட்டிற்குச் சென்றதும் அம்மா கொடுத்த காபியை குடித்துவிட்டு குளிக்கச் சென்றாள். திருமணம் வேண்டாமென்ற முடிவை தனது அம்மாவுக்குத் தெரிவித்தாள். "அபிராமி நீ இன்னும் சின்ன புள்ள மாதிரி பேசிட்டு இருக்க."

"ஒவ்வொரு தடவையும் நான் புடவை கட்டிட்டு ஏதோ பொம்மை மாதிரி வந்தவங்க எல்லாருக்கும் காபி கொடுக்கறது, மாப்பிள்ளை பேசணும் சொல்லி தனியா பேசறது. இது எதுவுமே எனக்கு சுத்தமா பிடிக்கல."

அன்று இரவு வழக்கம்போல சிவகாமி தனது கணவனிடம் அபிராமியைப் பற்றிப் பேசினாள்.

"ஏங்க நம்ம அபிய பார்த்தா ரொம்ப பாவமா இருக்குங்க, இன்னிக்கு சாயந்திரம் பேசறப்பே கல்யாணமே வேண்டாம்னு சொல்லி அழறா, எனக்கு என்ன செய்யறதுனே தெரியல. எவ்வளவு சொன்னாலும் பிடிவாதமா இருக்கா."

"சிவகாமி நீ தான் அவளுக்கு ஆறுதல் சொல்லணும், சரி நான் புரோக்கர் கூட மறுபடியும் பேசிப் பார்க்கிறேன்."

வெள்ளிக்கிழமை மாலை அலுவலகத்தில் வேலை செய்யும் நண்பரின் குழந்தையின் பிறந்த நாள் விழாவிற்குச் சென்றாள். விழாவை முடித்துவிட்டு இரவு 10 மணிக்கே வீடு திரும்பினாள், களைப்பில் நன்றாகவே உறங்கிவிட்டாள்.

சனிக்கிழமை காலை வழக்கம்போல் லேட்டாகவே எழுந்தாள். பேப்பர் படித்துக்கொண்டிருந்த பெரியசாமியிடம், அபி வருவதைக் கவனித்த சிவகாமி நேற்று மாலை நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி உரையாட ஆரம்பித்தாள்.

"அபி நேற்று ஃபங்சன் எப்படி இருந்துச்சு?"


"ம்ம் ஆபிசிலிருந்து எல்லாரும் வந்திருந்தாங்க. ஸ்வப்னாதான் ஏதோ வேலையிருந்திச்சுனு வரல!"

"ராகுல் வந்திருந்தாரா?"

இதைக்கேட்ட அபிக்கு உள்ளுக்குள் கரண்ட் ஷாக் அடித்ததுபோல இருந்தது. முகத்தில் தெரிந்த அதிர்ச்சியை மறைக்க முயற்சித்த அபிக்கு அம்மாவின் அடுத்த வாக்கியம் இன்னும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

"நேத்து சாயந்திரம் ராகுல் இங்க வந்தாருமா, அப்பாகிட்ட பேசினாரு. பார்க்க நல்ல பையன் மாதிரித்தான் தெரியுது, ஆபிஸ்ல நடந்ததெல்லாம் சொன்னாரு. நாளைக்கு உன்னப் பொண்ணு பார்க்க வர்றதாவும் சொன்னாரு."

இதைக்கேட்ட அபிக்கு தான் வேறு ஏதோ உலகத்தில்



இருப்பது போல் தோன்றியது. இதுவரை ராகுலின் மேலிருந்த அன்பு இன்னும் ஒருபடி உயர்ந்து நின்றது. இதுவரை மனதில் இருந்த குழப்பங்கள் மறைந்து புதுத் தெளிவு பிறந்தது.

நன்றி - கதிரமணி, தமிழ் கூடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம்பாரே!

முத்தமிழும் கற்றவனை, முடிசூடா மன்னவனை,
முயற்சியாலே
எத்தனையோ செய்தவனை, எழுத்தாய்க் குவித்தவனை,
எண்ணொணாத
சொத்துமடக்காதவனை, சோம்பலில்லாதவனை,
தூயநட்பால்
புத்தூக்கந்தந்தவனைப் புறந்தள்ளிக்கதவுகளைப்
பூட்டினாயோ?

ஏ, தாழ்ந்த தமிழகமே, இதுவோ உன் செய்நன்றி?
ஏன் தாழ்கின்றாய்?
தீதாக நினைக்கின்றாய், தேனாக மொழிகின்றாய்,
செயலோ வேம்பாம்!
ஓதாது திராவிடத்தை ஓதி நீ ஆரியத்தை
உயருவாயோ?
ஏதேனும் செய்தேபார், எதையுமே தாங்கும் பேர்
இதயம்பாரே?



தாமரைத்தீவான்
ஈச்சந்தீவு - கிண்ணியா

## உறவைப் பலப்படுத்தும் உண்மையன்பு

அகமும் புறமும்
அசுத்த மடைவதால்
சுக வாழ்க்கை கெட்டு
துன்பத்தைத் தரும்!

மனமும் மதியும்
சினம் அடைவதால்
அனர்த்தம் ஏற்படுத்தும்
ஆனந்த வாழ்வு கெடும்!

பொய்யும் புரட்டும்
புத்தொளி வாழ்க்கையை
நையப் புடைக்கும்
நாச காரணிகள்!

எய்தவன் இருக்க
அம்பை நோவதால்
எதுவித பயனையும்
காண்பதற் கில்லை!

பரஸ்பர உறவுக்கு
வரப் பிரசாதம்
முரண்பாடற்ற புரிந்துணரும்
உரமூட்டும் அன்பே!

சேனையூர் - மூதூர் கிழக்கு



## எங்கள் தேசம்

எங்கள் தேசம் இலங்கை
இரு மொழி பேசும் இலங்கை
தமிழ், சிங்களம், முஸ்லீம், பறங்கியர்
பல இனம் வாழும் இலங்கை
புத்தமதமே புகழ் மதமாகவும்
ஏனைய மதங்கள் கீழ் மதமாகவும்
சிங்கள மொழியே
ஆட்சிமொழியாகவும்
தமிழ் மொழியோ அடிமை
மொழியாகவும்
ஒற்றுமையில்லா இனங்களாகவும்
உள்ளுக்குள் வேற்றுமை வளர்க்கும்
பகைவர்களாகவும்
ஒன்பது மாகாணம் கொண்ட
தமிழினத்தான் ஆட்சி செய்யும்
வட கிழக்கு மாகாணமாகவும்
இருபத்தைந்து மாவட்டமாகவும்
மாநகர, நகர, பிரதேச சபைகளாகவும்
மலைநாடும் மாண்புறு விவசாய
கடல் சூழ் வளமும் நதி நீர்ப்பரப்பும்
குளம் குட்டை கண்ட மக்கள்
நீண்ட நெடிய பாதைகளும்
ஒற்றுமை இல்லா இனங்களாக
வறுமையில் வாழும் இலங்கை
எங்கள் தேசம் இலங்கை
இருமொழி பேசும் இலங்கை
சிங்களம், தமிழ், முஸ்லீம், பறங்கியர்
பல இனம் வாழும் இலங்கை

சீ.என்.துரைராஜா

## மத்தியஸ்த சபை

கும்மியடி தோழி கும்மியடி
நாட்டின் விழிப்புக்குக் கும்மியடி
அடி பிடி பணப் பிரச்சினை குடும்பவிரிசல்
யாவையும் ஆற்றுப்படுத்தும் சபைக்குக்
கும்மியடி
மன்றத்துச் செலவீனமின்றி சமாதானத்தைத்
தேடித்தரும்
மத்தியஸ்த சபைக்குக் கும்மியடி
சிறியோர் பெரியோர் ஏழை பணக்காரர் என்று
பாராது பாரபட்சம் காட்டாது
விளக்கம் பல கேட்டு அன்புடன் உரையாடி
சமரசம் காட்டும் சபைக்குக் கும்மியடி
வங்கிக் கடன் கைமாற்றுக் கடன்களுக்கும்
வற்புறுத்தலின்றி ஒப்பந்த மூலம் தீர்விற்கான
வழிகாட்டும்
மத்தியஸ்த சபைக்கும் பெரிய கும்மியடி

ச.அந்தோனிப்பிள்ளை, மத்தியஸ்தர்

# தம்பலகாமத்து அண்ணாவிமார்கள் பற்றிய ஒரு ஞாபகமீட்டல்

பாகம் : 02

நாட்டுக்கூத்துக் கலைஞர்களுடன் அவர்களது இரசிகர்கள் கொண்டிருந்த நெருக்கம் பலகாலம் நீடித்திருந்தது. அத்தோடு நாட்டுக் கூத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்த நடிகர்களின் இயற்பெயர்கள் மறைந்து அவர்கள நாட்டுக் கூத்தில் ஏற்று நடித்த பாத்திரங்களின் பெயர்களே நிலைபெற்றுப் போனதும் இதற்கு ஒரு நல்ல உதாரணம். பெரும்பாலான நாடகங்கள் இலவசமாகவே மேடையேற்றப்பட்டதாக அறியமுடிகிறது. நாடக முடிவில் அண்ணாவிமாருக்கும் நடிகர்கர்களுக்கும் வேட்டி ,சால்வை ,பணம் ஆகியவற்றை அன்பளிப்பு செய்யும் வழக்கம் இருந்திருக்கிறது. பின்நாட்களில் நாட்டுக்கூத்துக்களுக்காக கட்டணங்கள் அறவிட்டபொழுது அனுமதிச் சீட்டுக்கள் கோயில்குடியிருப்பில் விற்பனை செய்யப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.



தம்பலகாமத்தில் பிரபலியமாக விளங்கிய அண்ணாவிமார்கள் அயல் கிராமமான அலுங்கேணிக்குச் சென்று ஆர்வமுள்ள இளைஞர்களைத் திரட்டி கூத்துப் பழக்கி மேடையேற்றியதும் வரலாறாகும். இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் 1900--1960 ஆண்டு காலப்பகுதியில் தம்பலகாமத்தில் சிறந்து விளங்கிய அண்ணாவிமார்களின் விபரங்கள்

பின்வருமாறு.
1 திரு. கந்தப்பர் அண்ணாவியார்
2 திரு. கணபதிப்பிள்ளை அண்ணாவியார்
3 திரு. வேலுப்பிள்ளை அண்ணாவியார்
4 திரு.காளியப்பு முருகுப்பிள்ளை அண்ணாவியார்
5 திரு.சின்னத்துரை அண்ணாவியார்
6 திரு.வடிவேல் சிவப்பிரகாசம் அண்ணாவியார்

### திரு.கந்தப்பர் அண்ணாவியார்

தம்பலகாமம் கள்ளிமேட்டைச் சேர்ந்த திரு. கந்தப்பர் அண்ணாவியார் நாட்டுக்கூத்து, இலக்கியம், கர்நாடக சங்கீதம் ஆகிய கலைகளோடு சுதேச வைத்தியத்தியக் கலையையும் முறையாகக் கற்றுத் தேர்ந்தவர். இவரிடம் இதிகாச, புராண ஏடுகளும், சித்த வைத்தியம் தொடர்பான ஏடுகளும் நிறையவே இருந்தன.


இவரின் நெறியாழ்கையில் கள்ளிமேட்டு 'ஆலயடி வேள்வி வளாக' முன்றலில் மேடையேறிய 'விலாசம்' நாடகம் பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொடுத்தது. இந்நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்த அவரது மகனான கணபதிப்பிள்ளை அண்ணாவியாருக்கும் பெரும் புகழைத் தேடித்தந்தது. திரு.கந்தப்பர் அண்ணாவியார் தமது காலத்தில் சிறந்த கலைஞராகவும், சுதேச வைத்தியராகவும் சிறந்து விளங்கினார்.

### திரு.கந்தப்பர் கணபதிப்பிள்ளை அண்ணாவியார்

1900 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் கந்தப்பர் அண்ணாவியார் அவர்களுக்கு மகனாகப் பிறந்தார். தனது தந்தையிடம் இருந்து கர்நாடக சங்கீதம், இதிகாச புராணங்கள், சுதேச வைத்திய வாகடங்கள், கூத்துக்கலை ஆகியவற்றை முறையாகக் கற்றுக்கொண்டார். தனது தந்தையாரின் விலாசம் என்னும் நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்ததின் மூலம் கலையுலகில் பிரவேசித்த இவர் தனது தந்தையாரின் வழிகாட்டலைப் பின்பற்றி நாடகங்களைப் பழக்கி மேடையேற்றத் தொடங்கினார்.



1924 ஆம் ஆண்டு தம்பலகாமம் கள்ளிமேட்டு ஆலயடி வேள்வி வளாகத்தில் மேடையேறிய "கோவலன் சரித்திரம்' இவரது முதல் நாடகமாகும். இதனைத் தொடர்ந்து 'சகுந்தலா' 'சிறுத்தொண்டர் சரிதம்' 'அசுவகுமார்' 'லலிதாங்கி' போன்ற நாடகங்கள் மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டுதலையும் , இரசிகப் பெருமக்களின் அமோக வரவேற்பையும் பெற்றன.



1921 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் திருகோணமலை, தம்பலகாமம் ஆகிய இடங்களில் கச்சேரி செய்வதற்காக வந்து தங்கிய இந்தியக் கலைஞர்களான மதார் சாகிப், சின்னையா சாய்வு ஆகியவர்களிடம் ஆர்மோனியத்தை முறையாகக் கற்றுக் கொண்டார். பின்நாட்களில் திருகோணமலை மாவட்டத்திலேயே சிறந்த ஆர்மோனியக் கலைஞராக இவர் திகழ்ந்ததற்கு இதுவே அடிப்படைக் காரணமாக இருந்தது எனலாம்.

பல்துறைக் கலைஞராக விளங்கிய கணபதிப்பிள்ளை அண்ணாவியார் சிறந்த சுதேச வைத்தியராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது, அவரிடம் வைத்தியம் செய்து சுகமான நோயாளிகள் பல பரிசுப்பொருட்களைக் கொடுத்து மகிழ்ந்ததை அவரது பரம்பரையினர் இன்றும் நினைவு கூருவது வழக்கம்.

### திரு.வேலுப்பிள்ளை அண்ணாவியார் (1900 – 1955)

தம்பலகாமம் நாயன்மார்திடலில் புகழ்பெற்ற சித்த வைத்தியராக விளங்கிய திரு.பத்தினியர் என்பவருக்கு மகனாகப் பிறந்த திரு. வேலுப்பிள்ளை அண்ணாவியார் சிறந்த நடிகருமாவார். 'ஸ்ரீ விக்கிரம சிங்கன்' 'நளதமயந்தி' 'மயில்ராவணன்' 'பவளக்கொடி' போன்ற நாடகங்களைத் தொடர்ந்து மேடையேற்றியுள்ளர்.

தொடரும்..

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## அறிமுகப்படுத்தியவருக்கே நோ

சற்குணம் இயக்கத்தில் வெளிவந்த "வாகை சூடவா" திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமான ஜிப்ரான், அதன்பின்னர் கமல்ஹாசனின் விஸ்வரூபம் 2 மற்றும் உத்தமவில்லன் ஆகிய படங்களில் பணிபுரிகிறார்.

இந்நிலையில் சற்குணம் இயக்குவதாக இருக்கும் அடுத்த படத்தில் இசையமைக்க முதலில் ஒப்புக்கொண்டு பின்னர் மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது. தான் அறிமுகப்படுத்திய இசையமைப்பாளர் ஒருவர், தனக்கே மீண்டும் ஒரு படத்தில் இசையமைக்க மறுத்ததால், ஜிப்ரான் மீது சற்குணம் கடும் அதிருப்தியில் இருப்பதாக கூறப்படுகிறது.

## பிஸியான நயன்



நயன்தாராவும், உதயநிதி ஸ்டாலினும் இணைந்து நடிக்கும் "நண்பேண்டா" படத்தின் படப்பிடிப்புகள் கும்பகோணத்தில் நடந்து வருகிறது. அதே கும்பகோணத்தில் நயன்தாராவும் சிம்புவும் நடிக்கும் இது நம்ம ஆளு படத்தின் படப்பிடிப்பும் நடக்கிறது.இரண்டு படங்களுக்கும் மாறி மாறி கால்ஷீட் கொடுத்து நடித்து வருகிறார் நயன்தாரா. சில நாட்கள் காலையில் ஒரு படத்திலும் மாலையில் ஒரு படத்திலும் நடித்து வருகிறார்.

## குழப்பத்தில் உத்தம வில்லன்

கமல்ஹாசன் நடித்து வரும் உத்தம வில்லன் படத்தை ரமேஷ் அரவிந்த் இயக்குகிறார். இதில் ஆண்ட்ரியா, பூஜா குமார், பூ, மரியான் புகழ் பார்வதி மேனன் நடிக்கிறார்கள். இவர்களோடு இன்னொரு மலையாள நடிகையான பார்வதி நாயரும் நடிக்கிறார்.



இருவருக்கும் ஒரே பெயர் என்பதால் இவரது காட்சியை அவருக்கும், அவரது காட்சியை இவருக்கும், மாற்றி சொல்லிவிடுகிறார்களாம் உதவியாளர்கள்.

இதனால் பல குழப்பங்கள் ஏற்பட்டதாம்.

அதனால் இயக்குனர், பார்வதி என்பதை விட்டுவிட்டு நாயர், மேனன் என்றே இருவரையும் குறிப்பிடச் சொன்னாராம்.

## திருமண பந்தத்தில் பால்

விக்ரம் அனுஷ்கா நடிப்பில் இயக்குனர் விஜய் தெய்வத்திருமகள் படத்தை இயக்கியபோது, அந்த படத்தில் ஒரு சிறு வேடத்தில் நடித்த நடிகை அமலாபாலுடன் காதல் கொண்டார். ரகசியமாக வளர்ந்து வந்த விஜய் – அமலாபால் காதல் கடந்த சில நாட்களுக்கு முன்னர், பத்திரிகையாளர்கள் முன் முறையாக அறிவிக்கப்பட்டது. பின்னர் இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.




கடந்த 7ஆம் திகதி கொச்சியில் உள்ள ஒரு தேவாலயத்தில் விஜய் – அமலாபால் திருமண நிச்சயதார்த்தம் கிறிஸ்துவ முறைப்படி நடந்தது. வியாழன் அன்று சென்னையில் உள்ள மேயர் ராமநாதன் திருமண மண்டபத்தில் தமிழ் திரையுலக நட்சத்திரங்கள் முன் விஜய் – அமலாபால் திருமணம் இந்து முறைப்படி நடந்தது. காலை 10 மணியளவில் அமலாபால் கழுத்தில் விஜய் தாலி கட்டினார். அவருக்கு உறவினர்களும், நண்பர்களும், திரையுலக நட்சத்திரங்களும் வாழ்த்து தெரிவித்தனர்.

அமலாபால், திருமணத்திற்கு பின்னர் சினிமாவில் நடிப்பது இல்லை என்று கூறியுள்ளார்.



## சினிமா குறுஞ் செய்திகள்



- **அனுஷ்கா திருமணத்திற்கு தயார் நிலையில் மாப்பிள்ளை மற்றும் மண்டபம்**

  அனுஷ்கா, தற்போது அஜீத் 55, லிங்கா, ருத்ரமாதேவி, பாஹுபாலி ஆகிய நான்கு பிரமாண்டமான படங்களில் நடித்து வருகிறார். இந்த நான்கு படங்களையும் முடித்துவிட்டு அடுத்த வருடத்திலேயே திருமணம் செய்துகொள்ள உள்ளாராம்.

- **மீண்டும் பாரதிராஜா படமா? அலறியடித்து ஓடும் மகள் நடிகை.**

  அன்னக்கொடி படத்தை அடுத்து மீண்டும் ஒரு படத்தை இயக்குவது என முடிவெடுத்துள்ளார் இயக்குனர் பாரதிராஜா. இந்த படத்தில் அவரது மகன் மனோஜ் முக்கிய வேடத்தில் நடிக்கின்றார்.

- **நடிகை சமந்தாவை மணப்பது வதந்தியே - சித்தார்த்**

  தெலுங்கு பட மொன்றில் ஜோடியாக நடித்த போது நெருக்கம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. சமந்தாவை நான் மணப்பதாக சொல்வதும் வெறும் வதந்திதான் என்றார்.

- **மீண்டும் ஹீரோவாகும் சந்தானம்.**

  வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் படத்தின் ஹீரோயின் ஆஸ்னா சவேரியை மீண்டும் ஜோடியாக்கியுள்ளார். விசாகா சிங் ஒரு முக்கிய வேடத்தில் நடிப்பதோடு, குத்துப்பாடலுக்கு நடனமும் ஆடுகிறார்.

- **இனி முத்தக்காட்சியில் நடிக்க மாட்டேன் - தமன்னா.**

  நீச்சல் உடையில் நடிக்க மாட்டேன் என்ற தமன்னா முத்த காட்சிக்கும் மறுப்பு சொல்லி உள்ளார். நடிகைகள் போட்டியை சமாளிக்க இதற்கு சம்மதிக்கின்றனர். ஆனால் நான் நடிக்க மாட்டேன் என்று கூறியுள்ளார்.

- **மீண்டும் வெற்றிமாறன் தனுஷ் கூட்டணி.**

  வெற்றிமாறன் மற்றும் தனுஷ், மீண்டும் கூடியவிரைவில் இணைகிறார் என்ற செய்தி வெளிவந்த வேளையில், தனுஷ் மறுப்பினை மறைமுகமாக தெரிவித்துள்ளார். தனது படத்தை புறக்கணிப்பதாக உணர்ந்த வெற்றிமாறன் இப்படத்தை ட்ராப் செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## திரிஷா படுகொலை

நடிகை த்ரிஷா சென்னை ஈ.சி.ஆர். ரோட்டில் காரில் சென்று கொண்டிருக்கும் போது மர்ம ஆசாமிகள் நடிகையை பட்ட பகலில் படுகொலை செய்து விட்டு தப்பி ஓடிவிட்டனர். இந்த படுகொலை சம்பவத்தால் தமிழகமே அதிர்ச்சியில் உறைந்து போய் உள்ளது. கொலையாளி யார் அவர்கள் ஏன்? த்ரிஷாவை கொலை செய்தார்கள் என்பதை பொலிஸ் விசாரணை செய்கின்றனர். இதனைத் தொடர்ந்து கொலையாளியை கண்டுபிடித்தார்களா? இல்லையா? என்பது தான் தல55 படத்தின் கதை.



கௌதம் மேனன் இயக்கத்தில் அஜித் நடித்து வரும் அஜித்55 படத்தின் கதை வெளியே கசிந்துள்ளது. இந்த வேலையை செய்தவர் கௌதம் மேனனின் உதவியாளர்.

## பூச்சாண்டி சூர்யா



நடிகர் சூர்யா தற்போது லிங்குசாமி இயக்கத்தில் "அஞ்சான்" படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் அவருக்கு ஜோடியாக சமந்தா நடிக்கிறார். இப்படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு தற்போது கோவாவில் நடைபெற்று வருகிறது. வரும் ஆகஸ்ட் மாதத்தில் படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளனர்.

இப்படத்திற்கு பிறகு சூர்யா, வெங்கட்பிரபு இயக்கத்தில் நடிக்கவிருக்கிறார். இப்படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக நயன் அல்லது எமி ஜாக்சன் இரண்டு பேரில் ஒருவரை நடிக்க வைக்க தீவிரமாக பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

## மஞ்சப்பை

திரை விமர்சனம்



பூவே பூச்சூடவா படத்தில் வரும் பாட்டி பேத்தி கதையை உல்டா செய்து தாத்தா பேரன் கதையாக மாற்றத் தெரிந்த இயக்குனருக்கு அந்த படத்தில் இருக்கும் அழுத்தமான திரைக்கதையை காப்பியடிக்க தெரியவில்லை. வீக்கான திரைக்கதை, திருப்பங்கள் இல்லாத காட்சிகள், மொக்கையான வசனங்கள் என வெறும்பையாக இருக்கிறது இந்த மஞ்சப்பை.

ஐ.டி. கம்பெனியில் வேலை பார்க்கும் பேரன் விமல் கண் டாக்டர் லட்சுமி மேனனை காதலிக்கிறார். காதல் ஒருவழியாக ஒழுங்காக சென்றுகொண்டிருக்கும்போது ஊரில் இருந்து பேரனைப் பார்க்க தாத்தா ராஜ்கிரண் சிட்டிக்கு வருகிறார். அவர் செய்யும் சில அப்பாவித்தனமான காரியங்கள் விமலுக்கு எதிராக முடிகிறது. இதனால் ஹீரோயின் லட்சுமி மேனனுக்கு எரிச்சல் ஏற்படுகிறது. ஹீரோ குடியிருக்கும் அபார்ட்மெண்டில் அனைவரது வெறுப்பை சம்பாதிக்கும் தாத்தா ராஜ்கிரண், பின் எவ்வாறு ஒவ்வொருவரின் மனதையும் கவர்கிறார் என்பதுதான் கதை.



காதல் காட்சிகளிலும், பாடல் காட்சிகளிலும் லட்சுமி மேனனுக்கு ஈடுகொடுத்து நடிப்பதில் மிகுந்த சிரமப்படுகிறார். இப்படியே போனால் விமல் தேறமாட்டார் என்ற முடிவுக்கு கோலிவுட் வந்துவிடும். லட்சுமி மேனன் நடிப்பில் முதிர்ச்சி தெரிகிறது. பாடல் காட்சிகளில் கவர்ச்சியை அள்ளி தெளித்திருந்தாலும், படம் முழுவதும் ஹோம்லி லுக்கில் வந்து அனைவரையும் கவர்ந்து விடுகிறார்.

படத்தின் உண்மையான ஹீரோ ராஜ்கிரண்தான். அப்பாவி தாத்தாவாக வருவதும், கள்ளங்கபடமில்லாமல் அவர் செய்யும் ஒவ்வொரு விஷயங்களும் ரசிக்கும்படி இருக்கிறது. கிராமத்து பாசத்தை மிக அழகாக வெளிப்படுத்தி அசத்தி விடுகிறார். இனி இவர் கோலிவுட்டில் ஒரு ரவுண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ராஜ்கிரணுக்காக ஒருமுறை பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைகைக் கீபோர்ட்



கணனி வடிவமைப்பில் முன்னணியில் திகழும் HP நிறுவனம் லீப் மோஷன் (Leap Motion) எனப்படும் கை அசைவினைக் கொண்டு செயற்படக்கூடிய கீபோர்ட்டினை அறிமுகம் செய்துள்ளது. 99 டொலர்கள் பெறுமதியான இந்த கீபோர்ட்டினைப் பயன்படுத்தி கணனிப் பாவனையாளர்கள் சைகைகள் மூலம் கணனியின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும்.
மேலும் இத்தொழில்நுட்பம் HP Envy 17 மடிக்கணனியில் காணப்படுகின்றது. இது தவிர விண்டோஸ் 7, விண்டோஸ் 8.1 இயங்குதளங்களைக் கொண்ட கணனிகளிலும் இதனைப் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மிகச் சிறிய வாகனம்



உலகின் சிறிய இலத்திரனியல் வாகனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. Trikelet எனும் இந்த வாகனம் மடித்து எடுத்துச் செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது மணிக்கு 12 கிலோமீற்றர் வேகத்தில் பயணம் செய்யக்கூடியதாக காணப்படுவதுடன் ஒரு முறை சார்ஜ் செய்யப்பட்ட மின் கலத்தினைப் பயன்படுத்தி 15 கிலோமீற்றர்கள் வரை பயணிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.
இதன் விலையானது 1,400 டொலர்கள் தொடக்கம் 2,000 டொலர்களுக்கு இடைப்பட்டதாக இருக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது

## உடல் ஆரோக்கியத்திற்கு கைப்பட்டி



ஸ்மார்ட் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக தற்போது உடல் ஆரோக்கியத்தை பேண உதவும் பல் வேறு இலத்திரனியல் சாதனங்கள் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன.
இவற்றின் தொடர்ச்சியாக Razer நிறுவனம் Razer Nabu எனும் மற்றுமொரு இலத்திரனியல் கைப்பட்டியினை அறிமுகம் செய்துள்ளது. பீட்டா பதிப்பாக எதிர்வரும் ஜுலை மாதம் 10ம் திகதி இச்சாதனம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.
இதில் 500 வரையான அப்பிளிக்கேஷன்களை இயக்கக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

## விளையாட்டுப் பையன்

### FIREFOX OS



உலகின் முன்னணி இணைய உலாவிகளுள் ஒன்றான Firefox உலாவியினை வடிவமைத்த நிறுவனமான Mozilla சில மாதங்களுக்கு முன்னர் கைப்பேசிகளுக்கான இயங்குதளத்தினை உருவாக்கியிருந்தமை யாவரும் அறிந்ததே.
இதனைத் தொடர்ந்து கைப்பேசி உற்பத்தியிலும் காலடி பதித்தது. இந்நிறுவனம் இன்னும் சில மாதங்களில் குறைந்த விலையுடைய Firefox OS இயங்குதளத்தினைக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசியினை இந்தியாவில் அறிமுகம் செய்யவுள்ளது.
எனினும் விற்பனைக்காக அறிமுகம் செய்வதற்கு முன்னர் Mobile Asia Expo நிகழ்வில் இக்கைப்பேசி காட்சிப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய இதயத்துடிப்பு அறி கருவி

ThinkLabs எனும் நிறுவனம் இலத்திரனியல் தொழில்நுட்பத்தினைக் கொண்ட இதயத்துடிப்பு அறிகருவியினை (Stethoscope) அறிமுகம் செய்துள்ளது.



இது தற்போது பாவனையிலுள்ள சாதாரண இதயத்துடிப்பு அறிகருவிகளை விடவும் 100 மடங்கு வரை ஒலியை பிறப்பிக்கக்கூடியதாக இருப்பதுடன் இதயத்துடிப்பு வீதத்தினை துல்லியமாக கணித்து அறியத்தரக்கூடியதாகவும் இருக்கின்றது.
இதனை USB இணைப்பான் மூலம் சார்ஜ் செய்யக்கூடியதாக இருப்பதுடன், இதிலிருந்து பிறப்பிக்கப்படும் ஒலியினை iOS, Android, Mac மற்றும் PC சாதனங்களில் விசேட மென்பொருளின் உதவியுடன் பதிவுசெய்துகொள்ள முடியும்.

## கூகுள் அறிமுகப்படுத்தும் புதிய நீட்சி



ஜிமெயில் ஊடாக அனுப்பப்படும் மின்னஞ்சல்களை ஹேக்கர்களிடமிருந்தோ அல்லது வேண்டத்தகாதவர்களிடமிருந்தோ பாதுகாப்பதற்காக கூகுள் நிறுவனம் குரோம் உலாவிக்காக புதிய நீட்சி ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.
அல்பா பதிப்பாக வெளியிடப்பட்டுள்ள இந்த நீட்சியானது மின்னஞ்சல்களை என்கிரிப்ட் (Encrypt) செய்யக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த நீட்சியில் சில குறைபாடுகள் காணப்படுவதானல் தொடர்ந்தும் சோதனைப் பதிப்பில் உள்ளது.
அனைத்து குறைபாடுகளும் நீக்கப்பட்ட பின்னர் குரோம் வெப் ஸ்டோரில் இந்த நீட்சி பதிவேற்றம் செய்யப்படவுள்ளது.
அதன் பின்னர் குரோம் உலாவியை பயன்படுத்தும் பயனர்கள் தரவிறக்கம் செய்து பயன்படுத்திக்கொள்ள முடியும்.

## ஒரு கொலையின் கதை

2-16 மாயன்

ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.

அவர்கள் இருவரும் அக்கடையினுள் எவ்வித தயக்கமுமின்றிப் பிரவேசித்து நூறு ரூபாய்க்கு மீள் நிரப்பு அட்டையைக் கேட்டார்கள்.....
(15).............................................

அக்கணத்திலேயே அவர்கள் இருவரும் அக் கடையினுள் இருப்பவர்களை அளவெடுத்துக் கொண்டனர். இன்னுமொருவர் அக் கடையில் பொருட்களை வாங்குவதற்காக வந்திருந்தார். அவரும் சில ரூபாய்களுக்கான மீள்நிரப்பினைச் செய்து கொண்டிருந்தார்.
கடைச் சிப்பந்தியாக ஒரு இருபது வயது மதிக்கத் தக்க இளைஞன் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தான். அதைவிடச் சற்று வயதே அதிகமான ஒருவன் - அக் கடையின் உரிமையாளனாக இருக்க வேண்டும்- அங்கு காசு நடவடிக்கைகளை மேற்கொண்டுகொண்டிருந்தான்.
இவர்கள் இருவரும் கடைக்குட் புகுந்து நூறு ரூபாவிற்கான மீள் நிரப்பலை வேண்டிய போது அந்தக் காசு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தவனே எழுந்து வந்தான். அவன் அருகில் வந்ததும் அவர்களில் ஒருவர் அந்த இளைஞனைப் பார்த்து "நீங்கள் தானே மது........" என்ற வினாவைத் தொடுத்தார்.
மது அப்போது தான் வந்திருந்தவர்களை அவதானித்தான்..... அவர்கள் சாதாரண வாடிக்கையாளர்கள் அல்ல என்பதை அவன் உடனேயே அறிந்து கொண்டான்.
அவர்கள் ஏன் அங்கு வந்திருக்கின்றார்கள் என்பதையும் அவன் புரிந்து கொண்டான். அந்த நாளை அவன் எதிர்பார்த்தும் இருந்தான். தனது கடை சில நாட்களாகவே சில மனிதர்களால் அவதானிக்கப்படுவதை அவன் அறிந்திருந்தான். ஆகவே அவன் எவ்விதத்திலும் பதட்டமடையவில்லை.

" ஆம் நான் மது...." நீங்கள்....?"

அக் கேள்விக்குப் பதிலளிப்பதை விட அவர் தனது அடையாள அட்டையை அவனிடம் நீட்டினார்
மதுவின் குரலில் மெல்லி பதட்டமொன்று சூழ்ந்துகொண்டது.... அடுத்து என்ன என்பதை அவன் அவர்களின் முகத்தை நோக்கிய முறையில் அவர்கள் புரிந்துகொண்டார்கள்.
"மேல்மாடியில் தானே இன்ரநெட் வசதிகள் உள்ளன....? அங்கு யாரும் இல்லையென்றால் அங்கு செல்வோமா?" என்ற அவர்களின் கேள்வி முடியும் முன்னரே " ஆம்...நன்று ...அங்கே செல்வோம்....யாரும் இல்லைதான்.... " என்று முன்பின் தொடர்பின்றிசச சில வார்த்தைகளை மது உதிர்த்தான்...
பின்னர் தன்னைவிட வயதிற் குறைந்தவனிடம் " எவரையும் மேலே விடாதே" என்று கூறிவிட்டு அவர்களை அழைத்துக் கொண்டு மது மேல் தளத்திற்குச் சென்றான்.
ஐந்து கணிணிகள் பொருத்தப்பட்ட அந்த மேற்தளத்தில் போதுமான காற்றோட்டமும் வெளிச்சமும் கவிழ்ந்திருந்தன... ஆனால் மூவர் அமர்வதற்குச் சௌகரியமாக அங்கு இடமிருக்கவில்லை. என்றாலும் அவர்கள் ஒருவாறு அங்கு அமர்ந்து கொண்டார்கள்...
" மது...நாங்கள் என்ன விடயமாக உங்களிடம் வந்திருக்கின்றோம் என்பது உங்களுக்குத் தெரியும்.... அப்படித்தானே...."
அவன் அமைதியாகவே இருந்தான்.....
''சரி...திருகோணமலையில் நடைபெற்ற கொலையொன்று தொடர்பாக உங்களது நண்பரை நாங்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்திருப்பதாவது உங்களுக்குத் தெரியும் என்றே நினைக்கின்றேன்...." ....
" ஆம் அது தெரியும்...."
"நல்லது... அந்தக் கொலையில் உங்களுக்கும் தொடர்பிருப்பதாக நாங்கள் கருதுகின்றோம்......"
அவரது வார்த்தைகள் முடியும் முன்பே அவன் பதகளிப்படைந்தான்...
" இல்லையில்லை... அதற்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.... அவர்கள் எனது நண்பர்கள் இல்லை..... கொல்லப்பட்டவருக்கும் எனக்கும் தொடர்புகள் ஏதுமில்லை....... லலலலலல....பபபபப...."
" மதுவின் வாயிலிருந்து தொடராக வார்த்தைகள் விழத் தொடங்கின.... அவன் இதனை எதிர்பார்க்கவில்லைதான்.... அந்த அதிர்ச்சியை அவனுக்கு புலனாய்வாளர்கள் அளிக்கவே விரும்பினர்.... முன்னரே தன்னை தயார்ப் படுத்தியிருந்தால் சில வேளைகளில் தகவல்களை அவன் ஒளிக்க முடியும் என்பதனாலேயே அந்தச் சின்ன அதிர்ச்சியை அவனுக்கு அவர்கள் அளித்தார்கள்....
"மது...... " திடீரென புலனாய்வாளரின் குரல் சற்றுக் காட்டமாக ஒலித்து அவனது புலம்பலைக் கட்டுப்படுத்தியது.
"மது...எங்களுக்குச் சந்தேகம் இருக்கின்றது...அந்தச் சந்தேகம் உண்மையாகுமா அல்லது பொய்யாகுமா என்பதை நீ சொல்லப் போகும் விடயங்களில் இருந்துதான் நாம் தீர்மானிப்போம் ஏனெனில் ...... ஏற்கனவே அவர்கள் உன்னைப்பற்றி அறிக்கை தந்து விட்டார்கள்....." என புலனாய்வாளர் தனது பிரசங்கத்தை முடித்தார்.
அவன் சிறுதி நேரம் அமைதியாக இருந்தான்.... புலனாய்வாளர்கள் இருவரும் ஆளுக்கொரு வெண்சுருட்டுடன் அந்த மேற் தளத்தில் காற்றோட்டமுள்ள ஒதுக்குப் புறத்திற்குச் சென்று புகை வளையங்களைக் கர்ம சிரத்தையுடன் உருவாக்கிக் கொண்டிருந்தனர்...
எல்லாம் ஆயிற்று..... மது தனது வாக்கு மூலத்தை அளிக்கத்தயாரானான். அவனது கையடக்கத் தொலைபேசி அணைக்கப்பட்டது.
எனது பெயர் மது... நான் கீழேயுள்ள நண்பருடன் சேர்ந்தே இந்த தொடர்பாடல் நிலையத்தை நடாத்திவருகின்றேன்... எம்மிருவருக்கும் டொடி மற்றும் மகிந்த இருவரும் உதவிகளைச் செய்வார்கள்...டொடியுடன் மறியலில் இருக்கும் அலிகவையும் எனக்குத் தெரியும். அவர் சுமார் நான்க வருடங்களுக்கு முன்னர் எனது நண்பர் ஒருவருடன் வந்தபோது எனக்கு அறிமுகமானார். அலிக எனது தொடர்பாடல் நிலையத்திற்கு வருவதில்லை.... கடந்த மாதம் அளவில் ஒருவர் வந்து ஸ்கைப் வசதிகள் இருக்கின்றனவா என விசாரித்தார்...... அவரை நான் நிமிர்ந்து பார்த்த போது பழக்கப்பட்ட முகமாக இருந்தது.... அவர் அலிக.... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல்

# மனையும் மங்கை நல்லாளும்

ஒவ்வொரு உயிரினமும், இயற்கையின் சீற்றத்திலிருந்து சிறிது விலகி ஓய்வெடுப்பதற்கு தமக்கென உகந்த வசிப்பிடங்களை அமைக்க தெரிந்திருக்கின்றன. அதனதன் மரபணுவில் அந்த ஆற்றல் உட்புகுத்தப்பட்டுள்ளது.

நாம் தான் வாடகை வீடு..... உறவினரின் வீடு..... நண்பரின் வீடு என்று ஒட்டி வாழ பழகிக் கொண்டிருக்கின்றோம்.

எமது பிரச்சனைகளின் ஆரம்பம் அ∴தேயாகும்......! வாடகை கொடுத்து ஒரு வீட்டை வசிப்பதற்கு எடுப்பதென்பது மறைமுகமாக உங்கள் சுதந்திரத்தை பறி கொடுப்பதென்பதாகவே அமையும்! உறவும் நட்பும் எவ்வளவு காலத்துக்கு சுமூகமாக நீடித்திருக்கிறது? இதனை நீங்கள் கட்டாயம் உணரத்தலைப்பட வேண்டும்.

நீங்கள் சந்தோசமாக வசிப்பதற்கு மாளிகை போன்ற வீடு ஒன்று தேவையில்லை.... நீங்கள் சொந்தம் கொண்டாடக்கூடிய சிறிய நிலப்பரப்பில் சிறியதொரு குடிசையே போதுமானது! அந்த வளவில் சிறியதொரு கிணறு..... சுகாதார முறையில் அமைந்த சாதாரண மலசலகூடம். குடிசையைச்சுற்றி மா, பலா, வாழை இன்னமும் கொய்யா, பப்பாசி, நெல்லி, தென்னை என்று மரங்கள் இருந்தால் 'ஜில்' என்ற குளிர்ந்த காற்றின் வருடலில் மன அமைதியுடன் வாழமுடியும். மதில் என்று இல்லாவிட்டாலும் கூட அறுக்கையான வேலி சுற்றிவர இருத்தல் நன்று.

அடுத்து அந்த மனைக்கு ஆணுக்கு ஏற்ற நல்லாள் ஒருத்தி அமைய வேண்டும். மனை என்ற சொல்லிலிருந்து மனைவி என்ற உறவு முறையும், இல்லம் என்ற சொல்லிலிருந்து இல்லாள் என்ற சொந்தமும் எதனைக் குறிக்கின்றன என்று நோக்க வேண்டும். ஒரு பெண்ணை இல்லத்தரசி என்று குறிப்பிடுவார்கள்....... இல்லத்தரசன் என்று எவரையும் குறிப்பிட்டு பேசுவது கிடையாது!

மனைவியே வீட்டின் குத்துவிளக்கு...... வீட்டின் வசந்தம்...... வீட்டின் மகிழ்ச்சியாரவாரம்.

உங்கள் வாலிப வயது தொடங்குவதை அவதானிக்கும் அவர்கள் சகோதரி முறையான பெண்களுடனேயே தொட்டு பேசுவதையும் ஓடிப்பிடித்து விளையாடுவதையும் தடுத்து விடுவார்கள்.......

உங்கள் உடலில் இரத்த முறுக்கு ஏறிக்கொண்டு போகும்.... அந்நேரத்தில் எந்த ஒரு பெண்ணாவது (பெண்கள் மறுவளவாக ஆண்கள் என்று எடுக்கவும்) உங்களுக்கு இடம் கொடுத்தால்.... உங்களை நேசிப்பதாக காட்டினால் உங்களுக்கு இந்த உலகில் உள்ள மற்ற பெண்கள் எல்லாம் இருளில் மூழ்கி விடுவார்கள்...... சொந்தங்களை மறப்பீர்கள்... நண்பர்களை மறப்பீர்கள். அவள் இல்லாவிட்டால் வாழ்க்கையே வேண்டாம் என்று முடிவெடுப்பீர்கள்...!

இந் நிலையில் உங்கள் விருப்பத்திற்கு மாறாக பெற்றோர் கருத்துக் கூறினால் உங்கள் தலைக்கு மேல் கோபம் ஏறும்....!

சிறு வயது முதல் உங்கள் அழுக்குகளையெல்லாம் முகம் சுழிக்காமல் அகற்றி, உங்களை சீராட்டி தாலாட்டி வளர்த்த தாய் தந்தைக்கு பாடம் புகட்டுவதாக தீர்மானித்து உங்களுக்கு நீங்களே, தீ வைத்தல்...... கிணற்றில் குதித்தல்.... தூக்குப் போட்டுக்கொள்ளல்..... போன்ற படு மோசமான செயல்களில் இறங்கிவிடுவீர்கள்.

ஒரு துணையை தேடுவது அப்படியல்ல.... ஓரளவுக்கு ஒரு பெண் அழகாக இருக்கத்தான் வேண்டும். இறைவன் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏதோ ஒரு அழகை..... கவர்ச்சியை கொடுத்திருக்கின்றான். அதனை வெளிக்காட்ட ஒவ்வொரு பெண்ணும் தெரிந்திருந்தால் போதும்.


(வி.என்.சந்திரகாந்தி)

ஒரு பெண்ணின் மனதை.... நடத்தையை ஆறுதலாக சில காலம் அவதானிக்க வேண்டும்..... பெற்றோரின் அனுபவத்திற்கு உட்பட்டதான தெரிவுக்கு மதிப்பளிக்க வேண்டும்... நிறம், சீதனம் என்பவற்றை துச்சமாக கருதுங்கள்.

அவளை உங்கள் குடிசை என்கின்ற மாளிகையில் கொணர்ந்து வையுங்கள். அதுவே இல்வாழ்க்கை! எனது ஆத்மார்த்த நண்பர் ஒருவர் 1989ல் தனது அரச சேவை இடமாற்றத்தில் திருகோணமலைக்கு தனது மனைவி இரு பிள்ளைகளுடன் வந்தார். அவரது சகோதரி முறையான ஒருத்திக்கு நகரில் ஒரே வளவில் அடுத்தடுத்து மூன்று வீடுகள் இருந்தன. அதில் இளைய மகளுக்கான வீட்டை அவர் குடியிருக்க வாடகைக்கு கொடுத்தாள். வாடகையும் முற்பணமும் படிப்படியாக உயர்ந்து கொண்டே போனது. இளைய மகளுக்கு விவாகம் ஆனது. இரண்டு குழந்தைகளும் பிறந்தன.... யாரையும் மதிப்பதில்லை. வழமையான வாடகை, வீட்டு தொல்லைகள் அதிகரித்துக் கொண்டே போயிற்று. வாடகையையும் முற்பணத்தையும் கூட்டு இல்லாவிட்டால் இளையவளுக்கு வீட்டைக்கொடு என்று சச்சரவு. நண்பரும் வீட்டை ஒப்படைக்க சம்மதித்து விட்டார். அதற்குள் யாரோ, இளையமகளின் கணவன் மாலையில் வேறொரு வீட்டுக்கு சென்று தனது பழைய காதலியுடன் சல்லாபம் செய்வதாக பற்ற வைத்து விட்டார்கள். அகங்காரமும் அவசரமும் சகோதரங்கள் அல்லவா? மேலும் அவள் பிடிவாதக்காரி. ஒரு நாள் மாலை மண்ணெண்ணய் 'கானுடன்' தனது உந்துருளியில் குறிப்பிட்ட வீட்டுக்கு சென்றாள். இருவரும் கதைத்துக் கொண்டிருந்ததை கண்டாள். கோபமேலீட்டால் மண்ணெண்ணெயை தலையில் ஊற்றி தீயிட்டுக்கொண்டாள். பாவம்! யாராலும் காப்பற்ற முடியவில்லை.

இப்போ எனது நண்பர் அங்கு இல்லை. அன்புவழிபுரம் கிராமத்தில் சிறிய காணி ஒன்றில் வீடு கட்டி அழகாக குடும்பம் நடாத்துகிறார்.

அவர் வாடகைக்கு இருந்த வீட்டில் அவளது கணவன் இரண்டு பிள்ளைகளுடனும் காதலியுடனும்! சட்ட பிரகாரம் வாழ்ந்து கொண்டிருக் கிறான்.

நாம் தீர்க்க தரிசனத்துடனும் நிதானத்துடனும் வாழாவிட்டால் இந்த உலகம் எம்மை எப்படி தண்டித்துவிடும் என்று பாருங்கள்!

# தேசிய செய்தித் துளிகள்

- **முஸ்லீம் விவசாயிகள் போராட்டம்.**

இலங்கையின் கிழக்கே அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்திலுள்ள வட்டமடுவிலுள்ள முஸ்லிம் விவசாயிகளே தமது நிலங்களில் நெல் சாகுபடி செய்வதற்கு இராணுவம் தடைகளை ஏற்படுத்துகிறது என்று அங்குள்ளவர்கள் பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தனர்.

- **2ம் அமர்வு திங்கட்கிழமை நிறைவு**

இலங்கையில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணைகளுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான 2வது அமர்வு திங்கட்கிழமையுடன் முடிவடைந்தது. ஆனாலும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான அமர்வுகள் முற்றுப்பெறவில்லை என ஆணைக்குழுவின் தலைவரான பரக்கிரம பரணகம விசாரணை முடிவில் செய்தியாளர்களிடம் கூறினார்.

1990ம் ஆண்டு குருக்கள்மடம் என்னுமிடத்தில் 167 முஸ்லிம்களின் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம்களினால் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதில் அளித்த அவர், சாட்சிகள் இல்லாமல் சட்டத்தை இயக்க முடியாது என்றார்.

- **சர்வதேசத்தை எமாற்ற முடியாது**

சர்வதேச விசாரணைக்கு இடமளித்து ஒத்துழைப்பினை வழங்குவதே ஒரே வழியாகும். அதனைத் தடுத்தால் அத்துமீறிய சர்வதேச விசாரணை நடைபெறும், இதன் விளைவுகள் மிக மோசமாக இருக்கும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

- **ஆலோக்க பூஜாவ**

"லேக்ஹவுஸ்" நிறுவனத்தின் 52 ஆவது மிஹிந்தலை "ஆலோக்க பூஜாவ" என்ற "மிஹிந்தலை மின்னொளி பூஜை"யை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' அவர்கள் ஆரம்பித்து வைத்தார். புதன் மாலை மிஹிந்தலை தாது கோபுரத்துக்கு அருகே நடைபெற்ற இந்நிகழ்வுக்கு ஜனாதிபதி அவர்களுடன் லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் சிரேட்ட ஊடகவியலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். லேக் ஹவுஸ் நிறுவனம் 52 ஆவது வருடமாகவும் நடத்தும் "மிஹிந்தலா ஆலோக்க பூஜாவ"வுக்கு இலங்கை மின்சார சபையும். அபான்ஸ் நிறுவனமும் அனுசரணை வழங்கியுள்ளது.

- **இரட்டை வேடமிடும் யாழ். துணை வேந்தர்**

கடந்த காலங்களில் இறுதி போரின் போது அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டதனை மாணவர்கள் தீபம் ஏற்றி நினைவு கூர்வதற்கு திட்டமிட்டரீதியில் . குறித்த காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தை இழுத்து மூடச்செய்ததுடன் மாணவர்களின் உணர்வுகளுக்கு தடைவிதித்திருந்தார் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி.

ஆனால் நேற்று பௌத்த பொசன் பண்டிகையில் கலந்து கொண்டதுடன் பொசன் பண்டிகை தீபத்தை ஏற்றி வைத்து நிகழ்வை ஆரம்பித்தும் வைத்துள்ளார்.

# குறுக்கெழுத்து புதிர் 013

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | | | | ■ | 2 | து | ■ |
| 3 | | ■ | ■ | 17 | 24 | | 20 | ■ |
| லை | | 4 | | | | | 11 | |
| | | 6 | | | | | | ■ |
| 9 | | 19 | | | 21 | தே | | ■ |
| 16 | 23 | | 12 | | 13 | | | 18 |
| ■ | | | | ■ | | 10 | | |
| 15 | | | | 14 | | 22 | ■ | பு |
| 7 | | | | | ■ | | 8 | |

tpilfis mDg;g Ntz;ba Kftup :
kiyKuR. ,y - 159V>
flw;fiuf;fhl;rp tPjp> jpUNfhzkiy.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

### போட்டி முடிவுத் திகதி : 20.06.2014

### இடமிருந்து வலமாக

1. ஆங்கில முதலெழுத்தின் எதிர்பாராத இடப்பெயர்ச்சி
2. வேதமோதும் சிறுவனிடம் வேதம் இன்றி சண்டையிடு
3. நாயாய் நகைச்சுவை சொல்
4. இதுவம் பழம்பொருள் காப்பகமே
5. ............... ஒன்றே உலகில் மாறாதது.
6. தாய் .................. வணக்கம்.
7. இந்திராகாந்தி எழுதிய புதிரில் எழுத்துக்களுக்குப் போதிய இடமில்லை
8. பயத்தில் பெயர் மறந்த பேசும் பறவை.
9. பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய ஓர் நாளிதழ் திரும்பியுள்ளது.
10. முதல் உணவு சீரணம் ஆகாததால் குடலில் விளைந்த புண்.
11. பசு கன்றுக்குட்டிக்குத் தருவது. 12. குடி குடியைக் கெடுக்கும்.
13. ஊசலாடும் உயிரை மீட்டுத்தரவல்ல பழம்.
14. வாசனை திரவியங்களில் ஒன்று.
15. கேட்காது 16. அணில் கிளைக்கு கிளை ............ சென்றது.
17. துரியோதனன் கையில் இருப்பது.

### மேலிருந்து கீழாக

1. ஏன் கவலை என்றெண்ணாது படித்ததால் விரல் போனது தான் மிச்சம்
2. நன்றியுடன் நுகர்தல்
5. பல அடுக்குகளைக் கொண்ட வீடு
12. மங்கையர் சிரிப்பொரு ................ மருந்து
17. பழைய பாடல் ஒன்றின் முதல் சொல்
18. பிள்ளைத் தமிழ் சொல்லும் நிலாப்பருவம்.
19. ஓடி விளையாடு பாப்பா தந்தவர். மேலிருந்து கீழாக.
20. இது இருந்தால் வேலை கிடைப்பது நிச்சயம்
21. பிரச்சனைகள் வரும்போது ............... போக வேண்டும்.
22. நடிகர்களின் வாழ்க்கை இதில் தெரிவதில்லை.
23. எந்தப்பக்கத்திலிருந்து வேண்டுமானாலும் புதிரை அவிழ்க்கவும்.
24. இது ஒரு தொழிலாகவும் பெண்ணாகவும் வரும்.

### குறுக்கெழுத்து புதிர் 012 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | ப் | கா | 13 னி | ஸ் | 14 தா | ன் | 2 தி | 15 வா |
| 3 வி | ண் | ■ | த | ■ | 4 மி | ன் | ன | ல் |
| 5 த் | ள | த | ம | ■ | 6 ர | ம் | ம் | ப |
| 7 து | லா | ம் | ■ | 8 க | ப | ட | ம் | ■ |
| ள் | ■ | 9 பு | வ | ல | ர | ன் | ■ | 16 ச |
| ளு | ■ | லை | ■ | 10 க | ணி | 17 த | ம் | ன் |
| 11 ம | க் | ய | 18 க | ம் | ■ | ண் | ■ | ன |
| ண் | ■ | ன் | ளி | ■ | ■ | டோ | ■ | த |
| டை | ■ | ■ | று | ■ | வ | 12 ரா | க | ம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. தேசப்படங்களில் பிரதான பாதையை காட்டப் பயன்படுத்தும் நியம நிறம் எது?
1. பச்சை 2. சிவப்பு 3. செம்மஞ்சள் 4. கறுப்பு

02. நகரப்பகுதியில் வீதியைக் கடப்பதற்கு எதனைப் பயன்படுத்துவீர்?
1. மஞ்சட் கடவை 2. ஆற்றுப்பாலம்
3. மதகு 4. பாதைப்படகு

03. பிராணிகளின் உடலில் ஒட்டி வாழும் பிராணி எது?
1. ஈக்கள் 2. நுளம்பு 3. அட்டை 4. தெள்ளு

04. நிலத்துக்கு கீழேயுள்ள தண்டைக் கொண்ட தாவரம்?
1. இஞ்சி 2. மரவள்ளி 3. பலா 4. தீக்குறிஞ்சா

05. மீனவர் சிறு மீன்களைப் பிடிப்பதற்கு பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்த உபகரணத்திற்கு வழங்கப்படும் பெயர் எது?
1. நாம்புவ 2. கரைவலை 3. மடி 4. அத்தாங்கு

06. பின்வருவனவற்றுள் மிக எளிதாக ஆவியாகக் கூடிய திரவம் எது?
1. டீசல் 2. ஓடிக்கொலோன் 3. நீர்
4. தேங்காயெண்ணெய்

07. எரிந்து கொண்டிருக்கும் தணல் நெருப்பில் காய்ந்த உப்புக்கட்டியை இடும்போது நடைபெறுவது?
1. உப்பு கட்டி உருகுதல் 2. உப்புக்கட்டி எரிதல்
3. தீ அணைந்து போதல் 4. உப்புக்கட்டி சத்தத்துடன் வெடித்தல்

08. 'முயற்கொம்பு தேடி அலைந்தது போல' என்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?
1. இல்லாத பொருளைத் தேடி அலைதல்
2. அலைந்து திரிந்து தேடிய பொருளைப் பெறுதல்
3. வழி தவறி நிற்பவனிடம் வழி கேட்டல்

09. இந்த ஆண்டு எமது பாடசாலையின் ................................ விழா எமது அதிபரின் தலைமையில் நடைபெற்றது.
(பறிசளிப்பு, பரிசளிப்பு, பரிசலிப்பு, பரிசழிப்பு)

10. சிலர் கண்ணுக்குக் கண்ணாடி அணிவதற்கான காரணம்?
1. சூரிய வெப்பத்திலிருந்து கண்ணைப் பாதுகாப்பதற்கு
2. அழகாக இருப்பதற்கு
3. பார்வைக் குறையை நிறைவு செய்வதற்கு

11. கலகல, கமகம, சலசல
1. இணைமொழி 2. அடுக்கு மொழி 3. இரட்டைக் கிளவி

12. வருவான், கடித்தது, விளையாடினார்கள்
1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் 3. அடைமொழி

13. இலங்கையில் அதிகளவு ஆதிவாசிகள் வாழ்ந்தமையால் அப்பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட பெயர் யாது?
1. மூலிந்த 2. ஊவா 3. சபர 4. சப்பிரகமுவா

14. கையில் ஒட்டியுள்ள பலாக்காய்ப்பாலை எளிதாக அகற்ற பயன்படுத்தத்தக்கது எது?
1. சவர்க்காரம் 2. குளிர்நீர் 3. வெந்நீர் 4. மண்ணெய்

15. மாலை வேளையில் இலைகள் உறக்கத்தில் காணப்படும் தாவர இலை யாது?
1. நெருஞ்சி 2. புளி 3. காசித்தும்பை 4. ஈரப்பலா

16. பின்வரும் கவிதையை வாசித்து விடையளிக்குக.

செக்கச் சிவந்த செங்கதிரோனும்
கிழக்கினில் வந்துவிட்டான் - புவி
மக்கள் கண்விழித்துக் கிளம்பிட
வானில் உதித்துவிட்டான்

கொக்கரக்கோவெனக் கோழியுங் கூவுது
கொக்கோடு பற்பல புட்களும் மேவுது
சக்கரம் போலவே ஜகம் சுழன்றாடுது
தொக்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது.

1. இக்கவிதையில் வருணிக்கப்படும் காட்சி என்ன?

2. பின்வரும் ஒவ்வொன்றினதும் கருத்தை எழுதுக.
1. செக்கச்சிவந்த 2. கண்விழித்தல்

3. இங்கு உள்ள உவமானத்தை எழுதுக.

4. இக்கவிதையில் குறிப்பிடப்படும் இரு பறவைகளின் பெயர்களை எழுதுக.

5.' நின்ற இருள் சொல்லாமல் ஓடுது' என்பதன் மூலம் கவிஞர் வெளிப்படுத்த முயலும் கருத்து யாது?

17. 8கி.மீ நீளமான பாதையொன்றில் 250மீ இடைவெளிவிட்டு மின்கம்பங்கள் நடப்பட்டன. நடப்பட்ட மின் கம்பங்கள் எத்தனை?
1. 33 2. 34 3. 32 4. 35

18. 5மீ 40செ.மீ நீளமான ஒரு நாடாவில் இருந்து 260செ.மீ துண்டு வெட்டி எடுக்கப்பட்ட பின் எஞ்சியுள்ள நீளம்?



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## வறுமையிலும் கல்வி

குட்டிக் கதை

அது ஒரு அழகிய கிராமம் அந்தக்கிராமத்தில் டிது எனும் சிறுவன் ஒருவன் வாழ்ந்து வந்தான் அவன் சற்று ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவன், ஆனால் பாடசாலையில் கல்வியில் சிறந்த கெட்டிக்காரன், சகல விளையாட்டுக்களிலும் தவறாது பங்குபற்றுவான், சகல ஆசிரியர்களும் அவன் மேல் நன்மதிப்பு வைத்திருந்தனர், நாளடைவில் அவனது மூத்த சகோதர, சகோதரிகளின் வகுப்புகள் உயர உயர வீட்டில் படிப்படியாக வறுமை நிலை அதிகரிக்கத் தொடங்கியது. திடீர் என ஒருநாள் அவனது தாயாருக்கு வருத்தம் ஏற்பட்டுவிட்டது, வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்குகூட பணம்



இல்லை எனவே வீட்டில் வைத்து கைவைத்தியம் செய்தான், இவ்வாறு ஆண்டுகள் பல கடந்தன.

டிது தரம் 11ல் கல்வி கற்கின்ற வேளையில் அவனது அண்ணா, அக்கா இருவருக்கும் ஆசிரியர் பணி கிடைத்தது. இவர்களுடைய வருமானத்தில் குடும்ப வாழ்கையை கொண்டு செல்லக்கூடியதாக இருந்தது. இந்த காலப்பகுதியில் டிது தனது கவனம் முழுவதையும் கல்வியில் இருத்தி க.பொ.த(சா/த) பரீட்சைக்காக அல்லும் பகலும் அயராது ஆர்வத்தோடு படித்து பரீட்சை எழுதினான்.

அந்த ஒருநாள் வந்தது டிதுவிற்கு இன்ப அதிர்ச்சி தரும் நிகழ்வு நடந்தது. ஆம் டிது பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதலாவது இடம் பிடித்தான் டிதுவிற்கு மட்டற்ற மகிழ்ச்சி தனது தாயிடம் விரைந்து சென்று தனது எதிர்காலக் கனவினை கூறினான் 'அம்மா நான் மேற்படிப்பு படித்து நல்லதொரு உத்தியோகத்தில் இருந்து எமக்கென்று ஓர் காணி வாங்கி வீடு கட்டி, கார் வாங்கி அதில் இருந்து புகைப்படம் எடுப்பேன்'. உடனே அவனது தாயின் கண்ணில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

நாளடைவில் டிது ஓர் இலட்சியத்துடன் படித்து பல தங்கப் பதக்கங்களைப் பெற்றான், பல்கலைக் கழகம் சென்று வைத்தியராவதற்காகப் படித்தான் அவனது மதிநுட்பமான அறிவைக் கொண்டு பல பரீட்சைகளை எழுதினான். இதனால் வெளிநாடு சென்று மருத்துவக்கல்வியைத் தொடர்வதற்கு புலமைப்பரிசில் கிடைத்தது. லண்டன் சென்று உயர்கல்வி கற்று பிரபல வைத்தியரானான். தன்னுடைய தாயிடம் கூறியது போல பெரியவீடு கட்டி காரும் வாங்கினான். பின்னர் அவனது தாயின் பெயரில் ஒரு வைத்தியசாலை கட்டி ஏழை மக்களுக்காக இலவசமாக வைத்தியம் செய்தான் இதன்மூலம் பல மக்களின் உயிரை காப்பாற்றி உத்தமனாய்

– மாணவர்கள் இலட்சியத்துடன் வாழவேண்டும் –
அற்புதராஜன் டனுஷன்
தரம் - 07பீ, நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி



ஜே.நிதுக்ஷன்
தரம் 02ஏ,
நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி.

# சிறுவர் முரசு



## சிந்திக்க ..

கூட்டத்தில் சிரி, தனித்து அழு
கூட்டத்தில் அழுதால் நடிப்பு என்பார்கள்:
தனித்து சிரித்தால் பைத்தியம் என்பார்கள்.

## குழந்தைகளின் உடல் ஆரோக்கியம்

கடந்த வார தொடர்ச்சி..

உணவுப் பழக்கவழக்கங்கள்



1-3 வயது வரை உள்ள குழந்தைகள் இனிப்பு வகைகளை குறைக்க வேண்டும். 2 வயதுக்கு மேல உள்ள குழந்தைகளுக்கு கொழுப்பு நீக்கிய பால், குறைந்த ஆற்றல் தரும் உணவு, குறைந்த அளவு இடைவேளை உணவு தர வேண்டும். இளவயதினருக்கு குறைந்த கொழுப்புச்சத்து நிறைந்த உணவை விட குறைந்த மாவுச்சத்து எடை குறைப்பதற்கு, மிகவும் உடற்பருமன் அதிகமுள்ள குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு உண்ணும் உணவு 800 கிலோ கலோரி மட்டுமே இருந்தால் எடை இழப்பு வேகமாக இருக்கும்.

உணவின் போது, குழந்தைகளை தண்டிக்கக் கூடாது. உணவு உண்ணும் போது மகிழ்ச்சியாக பேச வேண்டும். உணவு விடயத்தில் பெற்றோர்கள், சகோதரர்கள் நல்ல வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். உணவு பலநேரங்களில் வழங்கப்பட வேண்டும். முதலில் விருப்பமில்லாத உணவுப் பொருட்களை பலமுறை தருவதன் மூலம் அதன் மேல் உள்ள வெறுப்புகளை உடைத்து விட வேண்டும்.

குறைந்த அடர்த்தியுள்ள உணவுப் பொருள் குழந்தைகளின் ஆற்றலைச் சமப்படுத்தியுள்ளன. குழந்தைகளின் விருப்பத்தை தடுப்பது ஆசையை குறைப்பதற்கு பதிலாக தூண்டி விடும்.

குழந்தைகளின் புது உணவுப் பழக்க வழக்கங்களை பற்றிய விழிப்புணர்ச்சியை வரவேற்க வேண்டும்.

2 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகள் உணவு உண்ணும் வேளையில் தொலைக் காட்சி மற்றும் கணிப் பொறி பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

தொடரும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. 15/2 x 16 எத்தனையாம் முக்கோண எண்?

02. 7/13 + 5/13    03. $x^5 = x^3$ X ..............

04. 81 ஐ 3 இன் வலுவில் எழுதுக.    05. y = -3x – 5 இல் x இன் குணகம் யாது?

06. 1226மி.லீ இல் பத்தினிடத்து இலக்கம் யாது?    07. lg 1000 =

08. $6^3$ இன் பெறுமானம்    09. கூட்டுக. 5மீ + 12 செ.மீ

10. செவ்வகத்தின் ஒரு மூலைவிட்டத்தின் நீளம் 13செ.மீ ஆயின், மற்றைய மூலைவிட்டத்தின் நீளம் யாது?

11. $S = \frac{1}{2}at^2$ இல் a ஐ எழுவாயாக மாற்றுக.

12. ஒரு கோடாத நாணயம் ஒரு முறை சுண்டும் போது மாதிரிவெளியை எழுதுக.

13. AB, BC எனும் புயங்கள் அமைக்கும் கோணத்தைப் பெயரிடுக.

14. $(x-3)^2$ இன் விரிவு    15. 12, 18 இன் கூட்டல் இடை

16. -3, -1, 1, 3 … எனும் கூட்டல்விருத்தியின் முதல் 8 உறுப்புக்களின் கூட்டுத்தொகையை காண்க.

17. இறங்குவரிசைப்படுத்துக. $(5/7)^2, (5/6)^2, (5/8)^2$

18. a = 4, b= -3 எனின், $3(2a^2 – 3b)/ ab^2$ இன் பெறுமானம் காண்க.

19. $Y = -3x^2$ எனும் வரைபின் உயர்வுப்புள்ளியின் ஆள்கூறு யாது?

20. குறித்த ஒரு வகை இனிப்புப் பைக்கற்றுகளிலே பைக்கற் ஒன்றிலுள்ள7 இனிப்புகளின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| a | 30 | 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 |
| b | 2 | 4 | 8 | 13 | 18 | 14 | 7 | 3 | 1 |

(a - இனிப்புகளின் எண்ணிக்கை, b – பைக்கற்றுகளின் எண்ணிக்கை)
பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.

1. பைக்கற்றுகளின் மொத்த எண்ணிக்கை?
2. இடையத்தைக் காண்க?
3. முதலாம் காலணையை காண்க.
4. மூன்றாம் காலணையை காண்க.
5. காலணை இடை வீச்சைக் காண்க.

**கணிதம் வழிகாட்டல் :**
**திருமலையின் பிரபல ஆசிரியர்**

MATHS
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
T. Kumanan 0772975953
23. Sivan st Trinco.
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

01. இலங்கையில் சாரா எண்ணெயை அதிக அளவில் பிரித்தெடுப்பதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் யாவை?
1. கறுவா, காவட்டம் புலி ஆகியன    2. ஏலக்காய், சாதிக்காய் ஆகியன
3. வாசனைப்புல், பைனஸ் ஆகியன    4. கராம்பு, றோசா ஆகியன.

02. தாவர இலையை மாப்பொருளுக்காகச் சோதிக்கையில், அது நீரில் அவிக்கப்பட்ட பின்னர் அற்ககோலில் அவிக்கப்படுவதற்குக் காரணம் என்ன?
1. மாப்பொருளுக்காகச் சோதிக்கையில் அயடீனுடன் ஊதா நிறம் உண்டாவதற்கு அற்ககோல் தேவைப்படுகின்றமை.
2. மாப்பொருள் அற்ககோலில் கரைகின்றமையால் அயடீன் சோதனையின் போது ஊதா நிறத்தை நன்றாகப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றமை.
3. இலைகளை அவித்த பின்னர் கலங்கள் இறக்கும் அதேவேளை அற்ககோல் இலைகளினுள்ளே நன்றாகப் புகுகின்றமை.
4. இலைகளை அவித்த பின்னர் அவற்றில் உள்ள பச்சையம் அற்ககோலில் கரைந்து இலைகளிலிருந்து அகற்றப்படுகின்றமை.

03. எதயில் அற்ககோலின் நீர்க் கரைசல் ஒன்றின் அமைப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் கருத்து யாது?
1. நீரின் $100cm^3$ இல் $4.5cm^3$ அற்ககோல் உள்ளது என்பதாகும்.
2. $95.5cm^3$ நீரில் $4.5cm^3$ அற்ககோல் உள்ளது என்பதாகும்.
3. $100cm^3$ நீர்க் கரைசலில் $4.5cm^3$ அற்ககோல் உள்ளது என்பதாகும்.
4. $95.5cm^3$ நீர்க் கரைசலில் $4.5cm^3$ அற்ககோல் உள்ளது என்பதாகும்.

04. ஒரு மூலகத்தை வளியில் எரித்த போது
- பிரகாசமான மஞ்சள் நிறச் சுவாலையுடன் விரைவாக எரிந்தது.
- வெளிர் மஞ்சள் நிறத் மீதியாக எஞ்சியது.

1. சோடியம்    2. இரும்பு    3. மக்னீசியம்    4. கந்தகம்

05. 0.5 மூலத்திறனுடைய NaOH கரைசல் 500அட இல் கரைந்துள்ள NaOH இன் திணிவு என்ன?
1. 10g    2. 20g    3. 30g    4. 40g

06. பித்தத்தின் ஒரு தொழிலாகக் கருத முடியாதது எது?
1. கார ஊடகத்தை ஏற்படுத்தும்    2. உராய்வு நீக்கியாக தொழிற்படும்.
3. விற்றமின் மு அகத்துறிஞ்சலில் உதவுதல் 4. புரதத் தொகுப்பில் உதவுதல்

### பகுதி 02.

01. பூக்கும் தாவரங்களில் நடைபெறும் மகரந்தச்சேர்க்கை, அதன் பின்னர் நடைபெறும் கருக்கட்டல் ஆகியவற்றின் மூலம் இலிங்கமுறை இனப்பெருக்கம் நடைபெறுகின்றது.

1. பூச்சிகளின் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெறும் பூக்களில் காணப்படும் இரு இசைவாக்கங்களை எழுதுக.
2. பூவின் ஆணகத்திற்குரிய பகுதிகளைப் பெயரிட்ட ஒரு வரிப்படத்தின் மூலம் வகை குறிக்க.

02. கருவில் நான்கு நிறமூர்த்தங்களைக் கொண்ட கலங்கள் உள்ள ஒரு தாவரத்தைக் கருதுக.
1. அத்தகைய ஒரு தாவரத்தின் பூவில் இருக்கும் சூலகத்தினுள்ளே உள்ள சூல்வித்துகளில் அடங்கியிருக்கும் நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை யாது?
2. கருக்கட்டலின் பின்னர் அத்தகைய ஒரு தாவரத்தில் உண்டாகும் வித்துகளின் கலங்களில் அடங்கியிருக்கும் நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை யாது?

## பாடம் : வரலாறு

01. ஒரு நாட்டின் செழிப்பு நிலை பற்றி அறிந்து கொள்ள உதவும் சான்று
1. கட்டடங்கள்    2. குளங்கள்    3. நாணயங்கள்    4. பாத்திரங்கள்

02. இலங்கை வரலாற்றைக் கூறும் மிகப் பழமையான இலக்கியம்?
1. மகாவம்சம்    2. தீபவம்சம்    3. சூழவம்சம்    4. பூஜாவலிய

03. சிவனொளிபாத மலை பற்றி பல தகவல்களை வெளியிட்ட தேசசஞ்சாரி
1. மார்க்கோ - போலோ    2. இபுன்பதூதா    3. பிளினி    4. பாகியன்

04. கல்வெட்டுக்களில் "கெதுவ, அருப்" என்ற பதங்களால் குறிப்பிடப்படும் பயிர்ச் செய்கை 1 .சேனைப்பயிர் 2. வீட்டுத்தோட்டம் 3. நெற்செய்கை 4. தானியச்செய்கை

05. இசுறுமுனி விகாரைக்கும் அருகிலுள்ள தோட்டங்களுக்கும் நீர்வழங்கப்பட்டமை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு
1. அம்பாகமுவ 2. வெஸ்ஸகிரி 3. திரிபரவு    4. வேல்கூட்டிய

06. ஒலுவடு என மகாவம்ச நூலில் குறிப்பிடப்படும் தொழில்
1. ஆடைத் தொழில்    2. நெசவு    3. ஓடு,செங்கல் உற்பத்தி    4. ஆபரணம்

07. 'அந்தராப்பன' என்ற பெயரில் சந்தை காணப்பட்ட இடம்
1. அநுராதகம 2. விஜிதகம    3. உபதிஸ்ஸகம    4. உருவெலகம

08. களிமண் தட்டுக்கள் உருவாகிய நாகரிகம்?
1. சீன கொவாங்கோ    2. நைல்    3. சிந்து    4. யூபிரதீஸ் - தைகிரிஸ்

09. தபசு, பல்லுக என்ற வியாபாரிகளால் கட்டப்பட்ட விகாரை
1 .தூபராம    2. ஹிரிகடுசாய    3. அபயகிரி    4 .வெல்கம் விகாரை

10. சிந்துவெளி நாகரிக காலத்தில் வாழ்ந்தவர்கள்
1. ஆரியர்    2. திராவிடர்    3. குஷாணர்    4. சாகர்

11. ஆரியர் சமூகத்தில் உயர் அந்தஸ்த்தில் இருந்து பல சலுகைகளை அனுபவித்தவர்
1. சத்திரியர்    2. வைசிகர்    3. சூத்திரர்    4. பிராமணர்

12. இலங்கையில் மிகப் பெரிய தூபி
1. ஜேத்தவனராமய    2. மகாவிகாரை    3. தூபராம    4. அபயகிரி

13. சீனாவின் பிரதான மதம் அல்லாதது
1. கொன்பியூஸியஸ்    2. தாவோ    3.பௌத்த    4. சின்டோ

14. அங்கோர்வாட் விகாரை காணப்படும் இடம்
1. கம்பூச்சியா    2. ஜாவா    3. பர்மா    4. தாய்லாந்து

15. பின்வருவனவற்றுள் மானிய முறையின் அம்சம் அல்லாதது
1. ஆட்சி ஒருமுகப்படல் 2. சகல அதிகாரம் கொண்ட அரசாட்சி
3. நைட்டுக்கள்,பிரபுக்களின் செல்வாக்கு மேலோங்குதல்
4. சுயபூர்த்தி பொருளாதாரம்



**ஆசிரியர் : அகிலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவாகியது கிழக்கின்...

கிழக்கிலேயே அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சபையில் பதவிவழியாக நான்கு உறுப்பினர்களும் அரசியல் நியமனமாக ஐந்து நியமனங்களும் வழங்கப்படவுள்ளன. ஒன்பது அங்கத்தவர்களைக் கொண்ட இச் சபைக்குத் தவிசாளராக தேசிய காங்கிரஸின் தேசிய, கொள்கைப் பரப்புச் செயலாளரும், சிரேட்ட சட்டத்தரணியுமான ஆமீருள் அன்சார் மௌலானா நியமனம் பெற்றுள்ளார்.

இச்சபைக்கு கிழக்கு மாகாணத்தின் வீடமைப்புத் தேவைகளைக் கண்டறிவது, அவை தொடர்பாகத் தகவல்களைத் திரட்டுவது, கொள்கை வகுப்பு, திட்டமிடல் மற்றும் அமுலாக்குதல் ஆகியவற்றைச் செய்வதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## கிழக்கின் ஊடகவியலாளரும்...

முகாமைத்துவம் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின்பேரில் செயலமர்வை தொடர்ந்து நடத்த இடமளிக்க முடியாதென அறிவித்து எனக் குறிப்பிட்டுள்ள இந் நிறுவனம் அச் செயலமர்வை நீர்கொழும்பு "கோல்ட் சேண்ட்ஸ்" ஹோட்டலில் நடத்துவதற்கு கடந்த வார இறுதியில் (யூன் 06 முதல் 08 வரை) நடத்த நடவடிக்கை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் திட்டமிட்டு அங்குவந்த குழுவினர் அதற்கு இடையூறு ஏற்படுத்தினர் எனவும் அதனைத் தொடர்ந்து ஊடகப் பயிற்சியில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக்கருதி கொழும்பு கலதாரி ஹோட்டலுக்கு அழைத்துவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் இந்த ஹோட்டலில் அறைகளை ஒதுக்கி ஒரு மணித்தியாலத்திற்குள் ஹோட்டல் நிர்வாகம் ஊடகவியலாளர்களை உடனடியாக வெளியேறும்படி அறிவித்ததாகவும் இதற்கான காரணத்தைக் கேட்டபோது, பிரபல அமைப்பெனக் கூறிக்கொள்ளும் குழு ஒன்று ஊடகவியலாளர்களை ஹோட்டலைவிட்டு வெளியேற்றாவிட்டால் ஹோட்டலை சுற்றி வளைக்கப்போவதாக அச்சுறுத்தியதாக ஹோட்டல் நிர்வாகம் தெரிவித்ததாகவும் அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இச் செயலமர்வை சட்டவிரோதமாக குழப்பியதை டிரான்ஸ் பெரன்சி இன்டர்நெசனல் சிறிலங்கா நிறுவனம் வன்மையாக கண்டிக்கிறது.

பொது நலனுக்கான விடயங்களை புலனாய்வு செய்வதற்கு புலனாய்வு அறிக்கையிடல் தொடர்பான பயிற்சியை வழங்குவதற்கு எமது நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்வை தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் குழப்புவதற்கு பல்வேறு சக்திகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை டிரான்ஸ் பெரன்சி இன்டர்நெனல் சிறிலங்கா நிறுவனம் வன்மையாக கண்டிப்பதுடன் இதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கும்படியும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

## கொக்கு அடித்தமைக்கு. . .

அம்பாறை, இலுக்குச்சேனைகுளத்தில் கொக்கு ஒன்றை அடித்து கொலை செய்த 58 வயதுடைய நபருக்கு 20 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக செலுத்துமாறு அம்பாறை நீதிமன்ற நீதவான் ஹேமந்த பெரேரா புதன்கிழமை(11) உத்தரவிட்டார்.

மேற்படி நபர் கடந்த 8 ஆம் திகதி இலுக்குச்சேனை குளத்தில் கொக்கு ஒன்றை இறைச்சிக்காக அடித்து கொலை செய்த போது தமண பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவ்வாறு கைது செய்யப்பட்டவரை புதன்கிழமை 11 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பொலிஸார் உத்தரவிட்டு பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

இந்நிலையில் மேற்படி நபர் புதன்கிழமை (11) அம்பாறை நீதிமன்ற நீதவான் ஹேமந்த பெரேரா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது குற்றவாளி தனது குற்றத்தை, ஒப்புக் கொண்டதையடுத்து தண்டப்பணமாக 20 ஆயிரம் ரூபாவை செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## வீதிப்போக்குவரத்து கருத்தரங்கு

பொலிஸ் திணைக்கள வீதி போக்குவரத்துப் பிரிவினரால் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் பணியாளர்களுக்கு வீதிப் போக்குவரத்து பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு 11.06.2014 எகெட் கரிட்டாஸ் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதனை திருகோணமலை தலைமை போக்குவரத்து பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரிகளான கே. ஜீ.சமந்த அமரசிரி மற்றும் எஸ்.எச்.எம்.ரோஸான் ஆகியோரால் நிகழ்த்தப்பட்டது.

## மத்திய அரசில் மேலும்...

இம் முன்மொழிவு தொடர்பாக விவாதிப்பதற்கு எதிர்வரும் வாரத்தில் கட்சியின் பேராளர் மாநாட்டைக் கூட்டி விவாதிக்க மு.கா முடிவெடுத்துள்ளதாகவும் தெரிகின்றது.

இதேவேளை முதலமைச்சர் பதவியில் மாற்றங்கள் எவையும் நிகழாது என முதலமைச்சருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## காசுத்தெருவைக் காப்பெட்...

முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இராஜவரோதயம் வீதிக்கு ஐந்து மில்லியன் இருபத்தையாயிரத்து நூற்று முப்பது ரூபாவும், காசுத் தெருவிற்கு ஒரு மில்லியன் எண்ணூற்று இருபத்திரண்டாயிரத்து நூற்று ஐம்பது ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இம் மதிப்பீட்டிற்குள் வரிகள் இணைக்கப்படவில்லை. 16.06 2014ம திகதிக்க முன்பாக நகரசபையால் வழங்கப்படும் கேள்விப்பத்திரத்தை நிரப்பி வழங்குமாறு ஒப்பந்தக்காரரிடம் நகரசபை வேண்டுகோள்

## இனியபாரதி சத்திய...

தனது பதவியை அண்மையில் இராஜினாமா செய்தார். அவரது வெற்றிடத்திற்கே இனியபாரதி நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாவட்ட பூப்பந்தாட்ட..

எனினும் எவரும் என்ன நடந்தது என்பதைக் காணவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அம்மேற் தளத்திற்குச் செல்லப் படிகளோ ஏணியோ இல்லாத நிலையில் தாவி ஏறிச் செல்லவேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் கடந்த பல வருடங்களாக திருகோணமலை மாவட்டத்தினை பூப்பந்தாட்டப் போட்டிகளில் முன்நிறுத்தியுள்ளதுடன் மாகாண மட்ட வெற்றிகளைப் பலதடவை படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் நடைபெற்ற கிழக்கு மாகாணப் போட்டிகளிலும் இவர் இரட்டையர் ஆட்டத்தில் வெற்றிபெற்றிருந்தார்.

இவரது அகால மரணம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்த மற்றோர் மாவட்டப் பூப்பந்தாட் வீரர், பல புதிய பூப்பந்தாட்ட வீரர்களை உருவாக்குவதில் இவர் முன்நின்று உழைத்ததாகவும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு சுகாதார...

மாநகர வரலாற்றில் வேலைப்பகுதி, சுகாதாரப் பகுதி ஊழியர்கள் இவ்வாறானதொரு சுற்றுலாவில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கால்வாய் தொற்று - சந்தேகம்

அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் மாடுகளுக்கு கால்வாய் தொற்று ஏற்பட்டிருப்பதாகவும் தொற்று ஏற்படாத பிரதேசங்களில் உள்ள மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையினை கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்களங்கள் முன்னெடுக்கும் எனவும் மாவட்ட கால் நடை வைத்திய அதிகாரி Dr.எம்.சி.எம்.ஜுனைட் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் தெஹியதகண்டி, மகஓயா, உகன, திருக்கோவில், காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பிரதேசங்களில் கால்வாய் தொற்று ஏற்பட்டிருப்பதாகவும் தோற்று ஏற்பட்டதன் பின்னர் இதற்கான தடுப்பூசி ஏற்ற முடியாதெனவும் மாவட்ட கால் நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களுக்கு இந்நோய் பரவாமல் இருப்பதற்கு அந்த பிரதேச கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்களங்கள் ஊடாக தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மட். சேமிப்புத் திட்டம்

மிகவும் பின்தங்கிய மட்டக்களப்பு முனைக்காட்டு கிராமத்தில் இல்லங்கள் தோறும் சேமிப்பு எனும் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முனைக்காட்டுக் கிராமத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் புதிதாக வங்கிக்கணக்குத்திறந்து ஒரு தொகைப்பணம் வைப்பிலிடப்பட்டு சேமிப்புப்புத்தகம் ... இத்திட்டத்திற்கு ... சேர்ந்த தாந்தியான் வேதநாயகம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனநிலை பாதிப்புடன்...

வீடு திரும்பிய போதிலும் இவ் இளம் பெண் மனநிலை பாதிக்கப்பட்டவராக உள்ளதாகவும், உணவு கூட சரியாக உண்ணக்கூடிய நிலையில் இவர் இருந்துள்ளார். மேலதிக வைத்திய பரிசோதனைக்காக இவா திருமலை பொதுவைத்தியசாலையில் கடந்த 14ம் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான போக்குவரத்து மற்றும் அத்தியாவசிய தேவை அனுசரனைகளை திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பு மேற்கொண்டுள்ளது. அத்துடன் தொடர்புடைய அரச திணைக்கள மட்டங்களிலும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாய் தெரிகின்றது. இவ்விடயம் தொடர்பாக தற்போதுவரை காவல்துறையில் முறைப்பாடு செய்யப்படவில்லை என்றே அறியப்படுகிறது.

## துரோகங்களுக்கு துணை...

மாட்டங்களில் நடாத்தப்பட்ட சாரதிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற அம்பாறை மாட்டத் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகளானது எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் பாரிய பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது.

2013ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் எனது ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் திருகோணமலை மாவட்டத்தின் அமைப்பாளர் பதவியை அம்பாறை மாவட்டத்திற்கு வழங்குமாறும் அமைச்சர் பஷில் ராசபக்சவிடம் விடுத்த கோரிக்கைகள் தொடர்பாக எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. இதனையடுத்தே தான் மாகாணசபை அங்கத்தவர் பதவில் இருந்து விலகுவதாக முடிவெடுத்ததாகத் தெரிவித்துள்ளார்.

## குளத்தில் மீன்பிடிக்கச் சென்றவர் பலி...

அம்பாறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் மரணகண்டி ஆற்றில் மூழ்கி 3 பிள்ளைகளின் தந்தை பலியாகியுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர். விநாயகபுரம் 3 கப்பூகனார் வீதியைச் சேர்ந்த சபாரெத்தினம் வில்சன்சேகர் (வயது 50) என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

மேற்படி நபர் விடுமுறைத் தினமான வியாழக்கிழமை 13.06.2014 பொழுது போக்கிற்காக மீன் பிடிப்பதற்காக ஆற்றிற்குச் சென்றுள்ளார். இந்நிலையில் மாலை 7.00 மணியாகியும் வீடு திரும்பாதிருந்ததினால் உறவினர்கள் இவரை தேடிச்சென்ற போது இவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளது தெரியவந்துள்ளது.

## திருச்சி சிறப்பு முகாமில் உண்ணாவிரதம்...

திருச்சி சிறப்பு முகாமில் ஈழத்தமிழர்கள் 3 பேர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சிறப்புமுகாம்களில் உள்ள ஈழத்தமிழர்களை விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இவ் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர.

இதில் தேவரூபன் (27), கேதீஸ்வரன் (33),புருசோத்தமன் (29) ஆகிய உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் கடல்வழியாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு கடந்த ஒருவருடமாக சிறப்புமுகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கூலிவேலைகளுக்கு சென்றே இவர்கள் தங்களதுகுடும்பங்களைபார்த்துவந்தார்கள். தற்போது இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதால் அவர்களின் குடும்பங்கள் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் தங்களின் குடும்பங்கள் இவ்வாறு வாழவழியின்றி இருப்பதனாலேயே விடுதலையை வலியுறுத்தி உண்ணாநிலை போராட்டத்தினை நடத்துவதாக உண்ணாவிரதம் இருப்பவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

உண்மையை உலகுக்குச்
சொல்லக் கூடிய
பத்திரிகையாளர்கள்
தேவை - 075 4252042




# பரா அத் இரவு என்பது!!!

நிச்சயமாக நாம் அதனை பாக்கியமுள்ள இரவிலே இறக்கினோம். நிச்சயமாக (அதன் மூலம்) அச்சமூட்டி எச்சரித்துக் கொண்டே இருக்கின்றோம். அல்குர்ஆன் 44:3 என்ற வசனத்தில் அல்லாஹ் ஷ.பான் மாதத்தின் 15ம் இரவைத்தான் கூறுகின்றான் என்று கூறுவது குர்ஆன் வசனங்களுக்கும் ஹதீஸ்களுக்கும் எதிரானது.



லைலதுல் கத்ர் இரவு குறித்து அல்லாஹ் கூறும்போது அது ரமலான் மாதத்தில் தான் உள்ளது என்பதை தெளிவுப்படக் கூறியுள்ளான்.

நிச்சயமாக நாம் அதை (குர்ஆஷன) கண்ணியமிக்க (லைலதுல் கத்ர் என்ற) இரவில் இறக்கினோம். அல்குர்ஆன் 97:1

ரமளான் மாதம் எத்தகைய தென்றால் அதில் தான் மனிதர் களுக்கு வழிகாட்டியாகவும், நேரான மறுப்பு வழியை தெளிவாக்கக்கூடியதாகவும் (நன்மை லிதீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான குர்ஆன் இறக்கியருளப்பட்டது. அல்குர்ஆன் 2:185

இவ்வாறு அல்லாஹ் குர்ஆன் அருளப்பட்ட மாதம் ரமலான் மாதம் என்றும் லைலதுல் கத்ர் இரவு ரமலான் மாதத்தில் உள்ள ஒரு நாள் என்றும் மனிதர்களுக்கு விளக்கி விட்டான். ஆகவே திருக்குர்ஆனின் 44:3 வசனத்தில், பாக்கியமுள்ள இரவு என்று அல்லாஹ் குறிப்பிடுவது ரமலானில் வரும் லைலத்துல் கத்ர் இரவு தான். ஷ.பான் 15ம் இரவு அல்ல.

முற்றும் .. ..

# செஞ்சிலுவை இயக்கத்தின் வரலாறு

பாகம் : 01

இதுவரை நாம் செஞ்சிலுவை இயக்கத்தின் வரலாற்றில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினைப் (International Committee of Red Cross – ICRC) பற்றித் தெரிந்து கொண்டோம்.

இன்று நாம் செஞ்சிலுவை இயக்கத்தின் மற்றுமொரு அங்கமான சர்வதேச செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்தினைப் பற்றி அறிந்து கொள்வோம். சர்வதேச செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனமானது ஆங்கிலத்தில் International Federation of Red Cross & Red Crescent Societies (IFRC) என அழைக்கப்படும்.

சர்வதேச செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனமானது உலகிலுள்ள சகல தேசிய சங்கங்கள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் இயங்குவதற்காக அமைக்கப்பட்ட ஒரு தாய்ச் சங்கமாகும். 13

முதலாவது உலக மகா யுத்தத்தின் பின் 1919ம் ஆண்டு சர்வதேச செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்களின் லீக் (League of Red Cross and Red Crescent Societies) உருவாக்கப்பட்டது. யுத்தத்தின் பாதிக்கப்பட்ட போர் வீரர்களுக்கும் சாதாரண (சிவிலியன்) மக்களுக்கும் பாரபட்சமின்றி மனிதாபிமான உதவிகள் வழங்கும் செஞ்சிலுவை இயக்கத்தின் சேவை சகல தரப்பினருக்கும் தேவைப்பட்டது. இத் தேவையின் முக்கியத்துவத்தினை அறிந்து கொண்ட ஐரோப்பிய சமூகத்தினர் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தேசிய செஞ்சிலுவைச் சங்கங்களும் நெருக்கமாக ஒத்துழைப்புடன் செயற்படுவதனை அவதானித்ததோடு அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சியில் 1919ம் ஆண்டு நவம்பர் மாதம் பாரிஸ் நகரில் உதயமானதுதான் சர்வதேச செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்களின் லீக்.

டாக்டர் என்.ரவிச்சந்திரன்
கிளை நிறைவேற்று அதிகாரி
திருகோணமலை கிளை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்




# வெண்டைக்காய் மோர்க் குழம்பு



தேவையான பொருட்கள்

புளித்த தயிர் - 1 கப், வெண்டைக்காய் - 4-5 (நறுக்கியது), மஞ்சள் தூள் - 1 தே.கரண்டி, உப்பு - தேவையான அளவு, கறிவேப்பிலை – சிறிது, வறுத்து அரைத்த - உளுத்தம் பருப்பு – 1-2 தே.கரண்டி, சீரகம் - 1-2 தே.கரண்டி, கடலைப் பருப்பு - 1 மே.கரண்டி, வர மிளகாய் - 1, கடுகு - 1 தே.கரண்டி, கறிவேப்பிலை – சிறிது, எண்ணெய் - 1-2 தே.கரண்டி, பெருங்காயத் தூள் - 1 சிட்டிகை

செய்முறை

முதலில் வறுத்து அரைப்பதற்கு கொடுத்துள்ள பொருட்களை தாச்சியில் போட்டு அடுப்பில் வைத்து, பொன்னிறமாக வறுத்து இறக்கி, குளிர வைத்து, மிக்ஸியில் போட்டு தண்ணீர் சிறிது சேர்த்து அரைத்து பேஸ்ட் செய்து கொள்ள வேண்டும். பின்னர் ஒரு தாச்சியை அடுப்பில் வைத்து, அதில் 1 தே.கரண்டி எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், வெண்டைக்காயை போட்டு, லேசாக தண்ணீர் தெளித்து, வெண்டைக்காய் நன்கு வதங்கும் வரை வதக்கி, இறக்கி தனியாக வைத்துக் கொள்ளவும்.

பிறகு மற்றொரு தாச்சியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி, தாளிப்பதற்கு தேவையான பொருட்களை போட்டு தாளித்து, பின் தயிர் ஊற்றி கிளறி, அரைத்து வைத்துள்ள பேஸ்ட், உப்பு மற்றும் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து கிளறி விட வேண்டும். பின்பு அதில் மஞ்சள் தூள், வெண்டைக்காய் சேர்த்து ஒரு கொதி விட்டு இறக்கினால், வெண்டைக்காய் மோர் குழம்பு ரெடி.

# இயற்கை அழகைப் பெற



வாழைப்பழம்

இதில் பொலிவிழந்து காணப்படும் சருமத்தை புத்துணர்வு பெறச் செய்யும் வைட்டமின் ஏ அதிகம் உள்ளதால், இதனை மசித்து சருமத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும்.

வெள்ளரிக்காய்

வெள்ளரிக்காயிலும் ஈரப்பதத்தை தக்க வைக்கும் குணம் உள்ளது. எனவே இதனை அரைத்தோ அல்லது துண்டுகளாக்கியோ சருமத்தில் சிறிது நேரம் வைத்து வந்தால், சருமத்தில் உள்ள அழுக்குகள் அனைத்தும் வெளியேறி, சருமம் பளிச்சென்று அழகாக மின்னும்.

கூந்தலை பராமரிக்க

கூந்தலை அலசும் போது, சீயக்காய் மற்றும் புளித்த தயிரை சேர்த்து, அதனை தலைக்கு தடவி, ஊற வைத்து, பின்பு கூந்தலை அலச வேண்டும். இதனால் பொடுகு தொல்லை நீங்குவதோடு, கூந்தலும் மென்மையாகும்.

# கொட்டியாபுரத்து சிங்கம்

கொட்டியாபுரம்
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

சம்பூர் சதீஸின்

கடந்த வார தொடர்ச்சி .. ..

வந்த குதிரையில் தாவியேறியவன் மருதனை வரச்சொல்லி ஆளனுப்பி விட்டு குதிரையைத்தட்டி விட்டான்.



சம்பூரில் இளஞ்சிங்கனுக்கு பிடித்தமான இடம் பூதக்கல் என்ற படியால் நிச்சயம் அவன் அங்கு தான் போயிருக்க வேண்டும் என்றெண்ணி அவ்விடத்தை நோக்கி மிக வேகமாகச் சென்றான். அந்தி சாயும் நேரம் ஆரவாரமில்லாத சூழலில் குதிரைக் குளம்பொலி கேட்டு இளஞ்சிங்கன் திரும்பிப் பார்க்கவும் புரவியானது அருகில் வந்து நிற்கவும் சரியாகவிருந்தது.

மாமனை இரு கரமெடுத்து வணங்கிய மருமகனை குதிரையின் பின்னால் ஏறும்படி சைகை காட்ட, குதிரை இருவரையும் சுமந்தவாறு மாளிகையை நோக்கி விரைந்தது.

வருங்கால கொட்டியார்ப்பற்று வன்னிமையும் தற்போதைய இளவரசுப்பட்டத்துக்குரியவனுமாகக் கருதப்பட்ட இளஞ்சிங்கன் வருகையின் நிமிர்த்தம் மாளிகையில் விருந்து தடபுடலாக ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

குளியலை முடித்துவிட்டு இராப்போசனத்தில் அமர்ந்த மாமனுக்கும் மருமகனுக்கும் இளஞ்சிங்கனின் அத்தை உணவு பரிமாறிக் கொண்டிருந்தவாறே அரண்மனையில் உள்ளவர்களின் சுகநலன்களைப் பற்றி அளாவிக் கொண்டிருந்தனர்.

வழக்கமாக இங்கு வரும் போதெல்லாம் மிகவும் கலகலப்பாகக் காணப்படும் மருகப்பிள்ளை இன்று வழக்கத்துக்கு மாறாக அமைதியாக இருப்பதை அவதானித்த அத்தை ஏதோ ஒரு விஷயம் அவனைப் பாதித்திருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு அவனின் வாட்டத்தைப் போக்க பல சுவையான சம்பவங்களைப் பற்றி பேச்சுக் கொடுத்துக்கொண்டேயிருந்தார்.

இவ்விராப் போசணம் முடியும் தறுவாயில் காவலனொருவன் உள்ளே வந்து வெற்றிமாறன் அனுமதிக்காக காத்துக்கொண்டிருந்தான். அவனிடம் ஒற்றர் தலைவன் மருதன் ஆலோசனை மண்டபத்தில் காத்துக்கொண்டிருக்கும் செய்தியை அறிந்ததும், இரவுணவை முடித்துக் கொண்டு இளஞ்சிங்கனையும் அழைத்துக் கொண்டு நுழைந்தார் தளபதி வெற்றிமாறன்.

அவ்விருவரைக் கண்டதும் எழுந்து வணக்கம் செலுத்திய ஒற்றர் தலைவனை அமரும்படி சைகை காட்டி விட்டு தளபதி தனது பேச்சைத் தொடங்கினார்.

கொட்டியாபுரப்பற்றின் வருங்கால இளவரசே! இவர் பெயர் மருதன். எனது முழு நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். கொட்டியாபுரப்பற்று வடக்குப் பகுதியான எனது எல்லைக்குட் பட்ட பிரதேசத்தின் தலைமை ஒற்றன். எனது தமையனான வன்னியனாரினால் அரசவைக்கு அழைக்கப்பட்டு பாராட்டுப் பெற்றவர்.

என்றெல்லாம் மருதனை அறிமுகப்படுத்தி விட்டு, தனக்கு வந்த செய்தியையும் கூறி, அரசசையில் நிகழ்ந்த எச்சம்பவத்தால் இந்நிலை ஏற்பட்டது என்று கூறுமாறு இளஞ்சிங்கனைக் கேட்டார். அவனும் தான் அவையிலிருந்த போது நடந்த அந்த எதிர்பாராத சம்பவத்தைக் கூறத்தொடங்கினான்.

## அரசகட்டளை



வழமைபோல அரசவை நிகழ்வுகள் நேற்றும் நடை பெற்றுக் கொண்டிருக்கும் போது, திடீரென காவலனொருவன் கண்டியரசின் தூதுவர் வன்னிமையைக் காண காத்துக் கொண்டிருப்பதாகக் கூறினான்.

தூதுவனை அழைத்து மரியாதை செய்து ஆசனமளித்த வன்னியனார் அவன் வந்த காரியத்தை என்னவென்று வினவினார். அவனும் வன்னிமைக்கு முகமன் கூறி தான் வந்த சேதியைத் தெரிவித்து ஒரு செய்திமடலையும் நீட்டினான். அதை வாங்கிப் படித்ததும் ஒருகணம் அதிர்ச்சியடைந்தவர் அதை வெளியிற் காட்டிக் கொள்ளாதவாறு, தூதுவனை உபசரித்து வழியனுப்பும் படி கட்டளையிட்டு, அரசவை நிகழ்வுகளை தொடர்ந்து நடத்தி நிறைவு செய்தார்.

... பாகம் 03 தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களம் நடத்தும் 2014ம் வருடத்துக்கான ஆண்களுக்கான எல்லே போட்டி கடந்த சனிக்கிழமை 07.06.2014 திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மட்டக்களப்பு மாவட்ட அணியினர் சம்பியன் நிலையினையும். அம்பாறை மாவட்ட அணியினர் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

## திணைக்களம் நடாத்தும் வருடாந்த விளையாட்டுப் போட்டி

ஆண், பெண்களக்கான கடற்கரை கரப்பந்தாட்ட போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியினர் இரு பிரிவகளிலும் சம்பியன் நிலையினையும். மட்டக்களப்பு மாவட்ட அணியினர் இரு பிரிவுகளிலும் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.



மாலை ஏகாம்பரம் மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான பாரம் தூக்குதல் போட்டியில் திருகோணமலை மாவட்டம் சம்பியன் நிலையினையும் அம்பாறை மாவட்டம் இரண்டாம் நிலையினையும் பெற்றுக் கொண்டன.

## தமிழ்த் தின போட்டி — கோணேஸ்வரா பெற்ற இடங்கள்

கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் நடத்திய மாகாண நிலை தமிழ் மொழித்தின போட்டியில் கலந்துகொண்ட திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்கள் பெற்ற இடங்கள் வருமாறு:

ஆரம்ப பிரிவு மாணவன் செல்வன் ஞா.கஜகோபன் பிரிவு 1 ஆக்கத்திறன் வெளிப்பாடு (கதைகூறல்) போட்டியில் முதல் இடத்தினைப் பெற்றுள்ளார்.

கிழக்கு மாகாண கல்வி திணைக்கம் நடத்திய மாகாணநிலை தமிழ் மொழித்தின போட்டியில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆரம்ப பிரிவு மாணவன் செல்வன் இ.பிரதீஸ் பிரிவு 1 இசையும் அசைவும் போட்டியில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

கிழக்கு மாகாண கல்வி திணைக்கம் நடத்திய மாகாணநிலை தமிழ் மொழித்தின போட்டியில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி தரம் 9ல் கல்வி பயிலும் மாணவன் சௌ.விஹ்ராஜ் தனி இசை பிரிவ 3 போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.


ஞா.கஜகோபன்


இ.பிரதீஸ்


சௌ.விஹ்ராஜ்

## செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டு விழா

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கமைய நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் 'செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டு விழா' நடாத்தப்பட வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது.

யுத்தம், சுனாமி போன்ற அனர்த்தங்களினால் உடல்-உள பாதிப்புக்குள்ளான சிறுவர்களின் தேகாரோக்கியத்தை பேணிப்பாதுகாக்கும் வகையில் இந்த 'செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டு விழா" விசேட செயற்பாடு கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் நடாத்தப்பட வேண்டும் என்ற கட்டாயத்தை கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் வலியுறுத்தி சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பி வைத்துள்ளது.



இந்த விசேட திட்டத்துக்கென கல்வி அமைச்சினால் விளையாட்டு ஆசிரியர்கள் வலயத்துக்கு ஒருவர் என்ற அடிப்படையில் வளவாளர்களாக பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த திட்டத்தின் அடிப்படையில் கல்முனை கல்வி வலயத்தில் உள்ள 64 பாடசாலைகளில் முதலாவது 'செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டு விழா' லாபீர் வித்தியாலயத்தில் வெள்ளிக்கிழமை(06.06.2014) மாலை நடைபெற்றது. அதிபர் திருமதி ஜெஸ்மினா ஹரிஸ் தலைமையில் நடைபெற்ற விழாவில் தேகப் பயிற்சி கண்காட்சி உட்பட சிறுவர்களுக்கான 25 போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. 'செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டு விழா" நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை முஸ்லிம் பிரிவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். ஏ.ஜ.:.பர் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

## பெண்களுக்கான உதைப்பந்தாட்டப் போட்டி

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மகளிர் உதைப் பந்தாட்டப் போட்டி சனிக்கிழமை (07.06.2014) கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இதில் இறுதிப் போட்டிக்காக மட்.கடுக்காமுனை வாணி வித்தியாலய அணியும், மட்.தன்னாமுனை புனித வளனார் மகாவித்தியாலய அணியும் தெரிவு செய்யப்பட்டன.



மேற்படி இரண்டு பாடசாலைகளினதும் மகளிர் அணிகளுக்குமிடையில் நடைபெற்ற இறுதிக் காற்பாந் தாட்டப் போட்டியில் 2 இற்கு பூச்சியம் என்ற வித்தில் புள்ளிகளைப் பெற்று மட்.கடுக்காமுனை வாணிவித்தியாலய அணி வெற்றிபெற்று பாடசாலைகளுக் கிடையிலான தேசியமட்ட மகளிர் காற்பந்தாட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

## இங்கிலாந்து Vs இலங்கை

இங்கிலாந்தில் நிலவும் காலநிலையினால் தாம் விளையாடுவதில் சிரமங்களை எதிர்நோக்கக் கூடும் என இலங்கை கிரிக்கெட் அணித்தலைவர் அஞ்சலோ மெத்தியூஸ் தெரிவித்துள்ளார். ஆரம்பமாகியுள்ள இலங்கை இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி தொடர்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டி



சீனா தைப்பேயில் நடைபெற்று வரும் 16ஆவது ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டிகளில் பெண்களுக்கான முப்பாய்ச்சல் (triple jump) போட்டியில் இலங்கையைச் சேர்ந்த வித்துஷா லக்ஷானி வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளார்.

## சர்வதேசச் செய்திகள்

### 10 வயதில் கல்லூரி படிப்பு




அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தில் படிக்கும் 10 வயது மாணவர் ஒருவர், பத்து வயதில் டிப்ளமோ சேர்ந்து சாதனை படைத்த முதல் மாணவர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.

4 வயதிலேயே இவருடைய அபார கல்வியறிவை கண்டுகொண்ட இவரது பெற்றோர்களும், ஆசிரியர்களும் இவரை அடுத்தடுத்த வகுப்பிற்கு சென்று கல்வி பயில் அனுமதித்தனர். 7வயது இருக்கும்போதே கல்லூரி மாணவர்களுக்கான பாடங்களை இவர் படிக்க ஆரம்பித்துவிட்டார்.

Tanishq Abraham, என்ற பெயருடைய இந்த பத்து வயது மாணவன் கூறும்போது, 'நான் டிப்ளமோ படிப்பை ஒரே வருடத்தில் முடித்துவிட்டு அடுத்த வருடமே பல்கலைக்கழகத்தில் சேர்ந்து எதிர்காலத்தில் ஒபாமா போன்று அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் நின்று பொதுமக்களுக்கு சேவை செய்வேன்' என்று கூறினார்.

### நூடில்ஸ் சாப்பிடுபவரா??

சீனாவில் உள்ள Tongcheng Rice Noodle Factory என்ற நூடுல்ஸ் தொழிற்சாலையில் ஏராளமான நூடுல்ஸ் தயாராகி அவற்றை பேக்கிங் செய்வதற்காக ஒரு அறையில் குவித்து வைத்துள்ளனர். அந்த அறைக்கு செல்லும் அந்நிறுவன ஊழியர்கள் வெறுங்காலுடன் நூடுல்ஸ் மேல் மிதித்து செல்கின்றனர். ஒரு ஊழியர் குவித்து வைக்கப்பட்டிருக்கும் நூடுல்ஸ் மேல் படுத்து தூங்குகிறார் என்று சீன புலனாய்வு பத்திரிகை ஒன்று படம் பிடித்து தங்கள் பத்திரிகையில் வெளியிட்டுளளது..



இவ்வாறு சுகாதாரமற்ற நூடுல்ஸ்தான் பாக்கெட்டில் விற்பனையாகிறது. நிறுவனத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு குறைந்தது பத்து வருட ஜெயில் தண்டனை கிடைக்கும் என சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

### ஜப்பான் - சீனா வானில் மோதல்

இரு நாடுகளும் உரிமை கொண்டாடும் வான் பரப்பான தென் சீன கடற்பகுதியில் ஜப்பான் எல்லையில் ஜப்பான் போர் விமானம் ஒன்று கடந்த புதன் கிழமை பறந்து கொண்டிருந்தபோது, சீன போர் விமானம் இரு எஸ்.யு.27 யுத்த விமானங்கள் பறந்து சென்றதாக ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சர் சுனோரி ஒனோடெரா குறிப்பிட்டுள்ளார். இரு விமானத்துக்கும் இடையே 30 மீற்றர் இடைவெளி மட்டுமே இருந்துள்ளது. பின்னர் சீன விமானம் அங்கிருந்து சென்றுவிட்டது.

தென் சீன கடற்பகுதியில் மனிதர் வாழாத தீவுகளான ஜப்பான் சென்கசு என்றும் சீனா டவோயு என்றும் அழைக்கும் தீவுகள் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் அண்மைக்காலமாக பதற்ற நிலை அதிகரித்துள்ளது. இந்த தீவுகள் ஜப்பானின் கட்டுப்பாட்டில் இருந்த போதும், அவை தம்முடையது என்று சீனா உரிமை கோரி வருகிறது.

### நிலாவை சுட்ட மனிதர்

அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் உள்ள ஒரு போதை மனிதர் தனது துப்பாக்கியை எடுத்து சரமாரியாக நிலாவை நோக்கி சுட்டுள்ளார். அவரை கைது செய்த போலீஸார் அவர் மீது எந்த பிரிவில் வழக்கு போடுவது என தெரியாமல் குழம்பி வருகின்றனர்.

### உடற்பருமன் ஒரு பிரச்சனையானது

பருமனான உடலை ஒரு ஊனமாக கருதுமாறு முதலாளிமாரை வலியுறுத்துவது குறித்த ஒரு சோதனை வழக்கை ஐரோப்பிய நீதிமன்றம் கவனத்துக்கு எடுத்துள்ளது. அளவுக்கு அதிகமாக பருமனாக இருந்ததற்காக தான் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக கர்ஸ்டென் கல்டொவ்ட் என்னும் டென்மார்க் நாட்டு குழந்தை பராமரிப்பாளர் கூறியுள்ளார். அவர் 160 கிலோகிராம் எடையுடையவர். ஆனால், தனது பணிக்கு தன்து எடை என்றும் தடையாக இருந்ததில்லை' என்று அவர் பிபிசியிடம் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியபாரதி சத்தியப் பிரமாணம்



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பிரான இனியபாரதி என்றழைக்கப்படும் புஷ்பகுமார் கிழக்கு மாகாண சபை உறுப்பினராக, கிழக்கு மாகாண ஆளுனர் றியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

கிழக்கு மாகாண சபையின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினரான துரையப்பா நவரத்தினராஜா..... 13

# துரோகங்களுக்குத் துணைபோக முடியாது

## துரையப்பா நவரெட்ணராஜா



மாகாணசபையின் உறுப்பினர் பதவியை விட்டொழிந்த முன்னாள் மாகாணசபை விவசாய அமைச்சரான துரையப்பா நவரெட்ணராஜா தன்னால் தமிழருக்கு எதிரான துரோகங்களுக்குத் துணைபோக முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதனாலேயே தான் அம் மாகாண சபை உறுப்பினர் பதவியை விட்டகன்றதாகத் தெரிவித்துள்ளார்.

நாம் ஆட்சி செய்த போது நியமனங்களை இனவிகிதாசார அடிப்படையிலேயே வழங்கினோம். ஆனால் இன்று கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவை எடுத்துள்ள தவறான தீர்மானத்தால் ஜீரணிக்க முடியாத வகையில் நிமனங்கள் வழங்கப்படுகின்றன. கடந்த மார்ச் மாதம் வழங்கப்பட்ட 200 நியமனங்களில் தமிழ் அலுவலர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

அண்மையில் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை....... 13

## தொடருந்தில் பாய்ந்து தற்கொலை

குடும்பத்தகராறினால் தொடருந்தின் முன்பாய்ந்து இளம் குடும்பத்தவர் ஒருவர் தனது இன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

பாலையூற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவலோகநாதன் சிவகரன் என்ற மூன்று குழந்தைகளின் தந்தையே கடந்த 06ம் திகதி கொழும்பு- திருகோணமலை தொடருந்தின் முன் பாய்ந்துள்ளார்.

டோக்கியோ சீமெந்துக் கம்பனியில் பணியாற்றிவந்த இவ்வூழியரின் தற்கொலை தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடைந்த நிலையில் அவரது நல்லடக்கம் கடந்த 08ம் திகதி நடைபெற்றுள்ளது.



# மாவட்டப் பூப்பந்தாட்ட வீரன் தவறி விழுந்து மரணம்

திருகோணமலை மாவட்டத்தைப் பிரிதிநிதித்துவப்படுத்தி கடந்த பல ஆண்டுகளாக பூப்பந்தாட்ட விளையாட்டில் ஈடுபட்ட மாவட்ட விளையாட்டு வீரரொருவர் வீட்டின் மேற்தளத்திலிருந்து தவறி விழுந்து மரணமடைந்துள்ளார்.

ல. இலக்மணதாசன் கடந்த 07ம் திகதி இரவு தனது வீட்டின் மேற்தளத்திலிருந்து இறங்கும் போது தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். மூன்று குழந்தைகளின் தந்தையான இவர் அன்றைய தினம் வீட்டின் மேற்தளத்திலுள்ள நீர்தாங்கியைச் செப்பனிட இரவு வேளையில் அம் மேற்தளத்திற்கு ஏறியுள்ளார். செப்பனிட்ட பின்னர் கீழே இறங்கும் போது இவ் அசம்பாவிதம் நடைபெற்றுள்ளதாக அயலவர்கள் தெரிவித்தனர்.... 13

# மட்டக்களப்புச் சுகாதார ஊழியர்கள் சுற்றுலா

மட்டக்களப்பு நிருபர்

கடந்த 2014 தை மாதம் மா.உதயகுமார் மாநகர ஆணையாளராக பொறுப்பேற்றதன் பின் மாநகரத்தில் மயானங்கள், பொது இடங்கள் உள்ளடங்கலாக பல சிரமதானப் பணிகளும் பாட்டாளிபுரம் விளையாட்டு மைதானம் போன்ற அபிவிருத்திப் பணிகளும் இடம்பெற்றுள்ளன.

மேற்படி, நகரை அழகுபடுத்தும் செயற்றிட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளிகளுக்கு உற்பத்தித் திறன் மேம்படும் வகையில் அபிவிருத்தி அடைந்து வரும் பகுதிகளான கண்டி, நுவரெலியா, அம்பாந்தோட்டை, கதிர்காமம் ஆகிய இடங்கள் மற்றும் அபிவிருத்திகள் காண்பிக்கப்பட்டுள்ளன........ 13



# ஒன்றரைக் கோடி மோசடி - பெண் தலைமறைவு

சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய்களை மோசடி செய்து விட்டு பெண்ணொருவர் தலைமறைவாகியுள்ளார்.

திருகோணமலை உவர்மலை மத்திய வீதியில் ஆடம்பர வீடொன்றில் வதியும் பெண்ணொருவரே இவ்வாறு பண மோசடி செய்து விட்டுத் தலைமறைவாகியுள்ளதாகப் பாதிக்கப்பட்டோர் தெரிவித்துள்ளனர்.

லட்சக் கணக்கான ரூபாய்களுக்கு தொடங்கப்பட்ட சீட்டு வியாபாரத்தில் ஈடுபட்ட பலருக்குப் பணம் செலுத்தாமல் நிலுவையாக விட்டுள்ளதுடன் மேலும் பலரிடம் ஐம்பதாயிரம் ரூபாய்கள் தொடங்கி ஐந்து லட்சம் ரூபாய்கள் வரை பத்திரங்களில் கையெழுத்திட்டுப் பெற்ற பணத்துடனேயே குறித்த பெண் தலைமறைவாகியுள்ளார்.

மேலும் தனது சகோதரனின் திருமணத்திற்குத் தாலிக்கொடி செய்வதற்காக எனக் கூறிப் பெண்மணி யொருவரிடம் நம்பிக்கையின் பேரில் ரூபா மூன்று இலட்சமும், நகைகளை அடைவிலிருந்து மீட்டு விற்று விட்டுப் பணத்தைத் தருவதாக சுமார் ரூபா ஏழரை இலட்சம் பணமும் மோடி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஏழரைலட்சம் இழந்த பெண்ணின் கணவர் வலிப்பு நோயுடையவர் என்பதும் தெரியவந்துள்ளது. கட்டிடத் தொழிலாளியொருவரின் மகளின் காப்புறுதி முதிர்வுப் பணமும் இம் மோசடிக்குள்ளாகியுள்ளது.

சீட்டுப் பணத்தை வீடு விடாகச் சென்று சேர்த்த இம் மோசடிப் பெண்ணின் கணவரே தற்போது தனது மனைவி காணாமற்போயுள்ளதாகத் தெரிவித்துள்ளார் என பாதிக்கப்பட்டவர்கள் அறிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட சிலர் தமது கைப்பட எழுதிய கடிதங்களுடன் அவ்வாறு பண மோசடி செய்தமைக்கான ஆதாரங்களை இணைத்து நடவடிக்கை எடுக்கக் கூடிய தரப்பினரை சந்தித்துள்ளனர்.

அண்மைக்காலமாகத் திருகோணமலையில் சீட்டு என்ற பெயரில் பல லட்சக் கணக்கான பணம் மோசடி செய்யப்படுவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

## கிழக்குப் பல்கலையில் பொருளியலாளர் கருத்தரங்கு

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பொருளியலாளர்கள் தமது வருடாந்த ஒன்றுகூடலை நிகழ்த்தியுள்ளனர்.

11 வது வருடாந்தப் பொருளியலாளர்களின் ஒன்று கூடல் கடந்த 11ம் திகதி நடைபெற்றுள்ளது. றுகுணு பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டுடன் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனுசரணையில் இவ்வொன்றுகூடல் நிகழ்ந்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகப் பொருளியல் துறைப் பேராசிரியர் ரி.பவன் அவர்களின் வரவேற்புரையுடனும் கிழக்குப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் கலாநிதி கிட்ணண் கோபிந்தராஜாவின் சிறப்புரையுடனும் இந்நிகழ்வு நடைபெற்றுள்ளது.

பல்கலைக்கழகப் பொருளியல் பாடத்திட்டம் தொடர்பான விளக்கங்கள், முன்மொழிவுகள், விரிவுரைகள் கலந்துரையாடல்கள் என்பன நடைபெற்றுள்ளன.

## திருமலையில் வைகாசி விசாகப் பொங்கல்

திருகோணமலையில் வைகாசி விசாகப்பொங்கல் விழாக்கள் களை கட்டியுள்ளது. நேற்று சேனையூர் அருள்மிகு நாகம்பாள், சம்பூர் நாகம்பாள் ஆலயங்களில் பொங்கல் விழாக்கள் இடம்பெற்றன

இங்கு பல ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்டு வழிபாடுகளையும் நேர்த்தி களையும் செய்தனர்.

பிரசித்தி பெற்ற ஆலயமான பாலம்போட்டாறு பத்தினி அம்மன் ஆலய வருடாந்த வைகாசி பொங்கல் திருவிழா கடந்த 9ம் திகதி இடம்பெற்றது.

இவ்விழாவுக்கான வளந்து திருகோணமலை நகரில் உள்ள பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இருந்து இன்று காலை கால்நடையாக பாலம்போட்டாறு நோக்கி எடுத்துச் செல்லப்பட்டன. நகரில் இருந்து தொடர்ந்து பக்தர்கள் கால்நடையாக சென்று இந்த பொங்கல் வழிபாட்டில் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org